பொது சன நூலகம்
20 MAY 1998

பக்கங்கள் 12

# காலைக்கதிர்

KAALAIKATHIR வாரவெளியீடு

விலை: 8/-

15 MAY 1998
உரிய நடவடிக்கைக்காக ஆணையாளர்

ஒளி 01 திருவள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 18 மே 01 — 07. 1998 கதிர் 09

# தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து செயற்படுவது கடினமானது!

## வீ. ஆனந்தசங்கரி தெரிவிப்பு

'தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பற்றி சில கட்சிகள் பேசுகின்றன. இக் கட்சிகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் இணைய முடியாது. ஏனெனில் நாங்கள் ஆயுதம் ஏந்தியவர்களுமல்ல. சண்டித்தனம் காட்டியவர்களும் அல்ல' இன விடுதலை என்றும், ஜனநாயகப் பாதைக்கு வந்துள்ளோம் என்றும் கூறும் இவர்களிடமிருந்து தான் விடுதலை தேவை.

இவ்வாறு த.வி.கூ.வின் ஏற்பாட்டில் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்றில் இடம் பெற்ற மேதினக் கூட்டத்தில உரையாற்றிய முன்னாள் பா.உவும், த.வி.கூ. உப தலைவருமான வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார். மாநகர முதல்வர் திருமதி சரோஜினி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்;

இன்று தீவுப் பகுதியில் ஒரு அரசாங்கம், வவுனியாவில் ஒரு அரசாங்கம், வன்னிக்குள் ஒரு அரசாங்கம் எனப் பல அரசுகள் செயற்படுகின்றன. தீவு அரசிடமிருந்தும், வவுனியா அரசிடமிருந்தும் மக்களை விடுவிக்குமாறு நாங்கள் கொழும்பு அரசைக் கோருகின்றோம்.

இன விடுதலை என்றும், ஜனநாயகப் பாதைக்கு வந்துள்ளோம் என்றும் கூறிக் கொண்டு திரியும் இந்த அமைப்புகளிடமிருந்து தான் எமக்கு விடுதலை தேவை. ஜனநாயக வழிக்கு திரும்பி விட்டதாக கூறிக்கொள்ளும் இந்த ஆயுத பாணிகளுக்கு மே தினத்தைக் கொண்டாட என்ன உரிமை இருக்கிறது என்றும் வினா எழுப்பினார். அத்துடன் தமிழ் கட்சிகளின் ஒற்றுமை பற்றி சில கட்சிகள் பேசுகின்றன எனவும் குறிப்பிட்டார் அத்துடன் நாங்கள் அரசுடன் கூடிக் குலாவவில்லை சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடன் பேசியிருக்கிறோம அது இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக மட்டுமே எனவும் குறிப்பிட்டார்.

## இரு நாள் யுத்த நிறுத்தம்

வடக்கு கிழக்கு யுத்தத்தில் அகப்பட்டுள்ள சிறுபிள்ளைகளின் நிலை குறித்து அறிவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி ஒலரா ஒற்றுனு இலங்கை விஜயம் மேற்கொண்டுள்ளார் வன்னிப் பகுதிக்கும் இவர் விஜயம் செய்யவுள்ளதை யடுத்து இருநாள் யுத்தநிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்க உள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் 33 பேர் பதவி துறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த ஜனவரி மாதத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பிரதேச சபைகளும், ஒரு நகர சபையும் இன்னமும் தமது செயற்பாட்டை ஆரம்பிக்கவில்லை.

ஈ.பி.டி.பி யினர் கைப்பற்றிய பத்து பிரதேச சபைகளில் வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபையில் மட்டுமே பொறுப்பு ஏற்கப்பட்டுள்ளது.

தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் சாவகச்சேரி நகர சபைத் தலைவர், பிரதித் தலைவர் உட்பட சுமார் 33 உறுப்பினர்கள் தமது பதவிகளை இது வரையில் இராஜினாமாச் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ் மண்ணில் நிற்பது ஆனந்தம் தருகிறது

ஏ. ஈ. மனோகரன்

எத்தனை நாடுகளுக்குபறந்து சென்று இசை நிகழ்ச்சி நடத்தினாலும் எனது சொந்த மண்ணில் பாடும் போது ஏற்படுகி ஆனந்தமும் பூரிப்பும் சொல்லி அடக்க முடியாதது. இவ்வாறு பிரபல பொப்பிசை பாடகர் ஏ. ஈ. மனோகரன் தெரிவித்தார். தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் ஏற்பாட்டில் குருநகரில் இடம் பெற்ற மேதினக் கூட்ட இசைநிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஏ. ஈ. மனோகரன் மேலும் குறிப்பிடுகையில் யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன்சுவை ஊறும் என்று 21 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மண்ணிலிருந்து பாடினேன். நான் சென்ற இடமெல்லாம் இந்தப் பாடலைப்பாடத் தவறுவதில்லை எனினும் இங்கு அதனைப்பாடும் போது ஏற்படும் பூரிப்பும் உற்சாகமும் அனேகம், இந்த சந்தர்ப்பத்தை எனக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி.யின் மே தினம்

மே தினத்தையொட்டி கொழும்பில் ஜே. வி. பி. நடத்திய பேரணியில் ஏனைய கட்சிகளை விட அதிகமானோர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜே. வி. பி. பேரணியில் கார்ல் மார்க்ஸ், லெனின் போன்ற கம்யூனிச தலைவர்களின் உருவப் படங்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

## போராட்டம் வெற்றி பெற ஐக்கியமே அவசியம்

— சுபத்திரன்

அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும் பல கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டும் கூட எமது போராட்டம் இன்னும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. அனைத்து தமிழ் அமைப்புக்களும் ஐக்கியப்படுவதன் மூலமாகவே போராட்டம் வெல்லப்படலாம். இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யாழ் மாவட்ட பொறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கங்களின் ஐக்கியம் மக்கள் சக்தியில் தங்கியுள்ளது

— மாணிக்கதாசன்

இயக்கங்களை ஒன்றுபடுத்த வேண்டிய கடமையும் பொறுப்பு மக்களுக்கே உரியது. மக்களே உங்களை நாடிவருகின்ற கட்சிகளின் பிரதிநிதிகளிடமும், இளைஞர்களிடமும் ஒற்றுமையாக இருங்கள் என் எண்ணத்தை அடிக்கடி எடுத்துச் சொல்லுங்கள். இது உடனடியாக பயனளிக்கா விட்டாலும் காலப்போக்கிலாவது பயன் தரலாம். இவ்வாறு புளொட் அமைப்பின் உபதலைவர் மாணிக்கதாசன் தெரிவித்தார்.

குருநகரில் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகமும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் இணைந்து நடாத்திய மே தின பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், எமது பிரச்சினைகளை நாங்களே தீர்த்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

— நிசாந்தன்

எமது பிரதேச அபிவிருத்திக்காக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக குறிப்பாக மின்சார வசதி, குடியிருப்பு வசதிமற்றும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முழு அர்ப்பணிப்புடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலை இயக்க ஸ்தாபகர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 12-வது ஆண்டு நினைவை குறிக்கும் முகமாக மேற்படி அமைப்பின் அங்கத்தவர்கள் எதிர்வரும் 6-ம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்ய உள்ளனர். (சே)

உள்ளதை உள்ளபடி ஊருக்கு எடுத்துரைக்கும் வார இதழ்

# யாழ் நகரில் திரைப்பட மோகம்

யாழ் நகரம் தற்போது ஒரே 'பிஸி' பாடசாலைகள் இயங்குகின்றன. வர்த்தக நிலையங்கள் இயங்குகின்றன. வீதிகள் எங்கும் வாகனங்கள் நடமாட்டம். மக்கள் நெரிசல், இவற்றையெல்லாம் பார்க்கும் போது இங்கும் யுத்தம் இடம் பெற்றதா என்று சிந்திக்கும்படி யாழ் நகர செயற்பாடு அமைந்துள்ளது.

அதாவது இயல்பு நிலை திரும்பிவிட்டது மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்றே பார்ப்பவர் யாரும் எண்ணிக் கொள்வர்.

ஆனால் உண்மை நிலை அல்லது யதார்த்த நிலை எவ்வாறு உள்ளது? மக்கள் எவ்வகையான ஒரு நிலையில் வாழ்கின்றனர் என்ற கேள்வி ஒரு புறம் இருக்க மேற் கூறப்பட்ட மாயத்தோற்றத்திற்கு வலுவூட்டுவது போல வீதிக்கு வீதி மினி சினிமா திரையரங்குகள், வீடியோ பிரதிகள் வாடகைக்கு விடும் வர்த்தக நிலையங்கள் பெருகிக் கொண்டே வருகின்றன.

யாழ் நகரில் செல்வா, நீகல் சந்திரன், எனப் பல தரப்பட்ட மினி சினிமா திரை அரங்குகள் காலை 10.30 மணிக்காட்சியும் பின்னர் பிற்பகல் 2.30 மணிக்காட்சியென படங்கள் தாராளமாக காண்பிக்கப்படுகின்றன,

அரங்கு நிறைந்த காட்சிகள் இடம் பெறுகின்றன வாரத்தில் எழு தினங்களும் காட்சிகள் இடம் பெறுகின்றன. ஒரு காட்சியில் சராசரி இருநூறு பேர் வரையில் படம் பார்க்கிறார்கள். ஒருவருக்கு தலா 15 ரூபா வரையில் பணம் அறவிடுகிறார்கள்.

**நீர்வையூரான்**

அதேபோல சுமார் பத்து வீடியோ பிரதிகள் வழங்கும் வர்த்தக நிலையங்கள் இயங்குவதும் இங்கு நோக்கத்தக்கது.

இது பற்றியெல்லாம் இங்கு குறிப்பிடுவது திரைப்படம் காண்பிப்பவர்களுக்கோ அல்லது திரைப்படப்பிரதிகள் வாடகைக்கு விடுபவர்களுக்கு எதிராக தடையுத்தரவு போடுவதோ அல்லது அவர்களுக்கு எதிராக கண்டனக் கணைகள் விடுவதற்கோ அல்ல. அது எமது வேலையும் அல்ல,

திரைப்படத் திரையரங்குகள் நடாத்துவதும் படம் பார்ப்பதும் தனி மனிதருடைய ஜனநாயக உரிமைகள், அதனை தடுக்கவும் கூடாது. தடுக்கவும் முடியாது.

இங்கு நாம் மேற்படி திரையரங்குகளில் காண்பிக்கப்படும் படங்கள் எத்தகைய தாக்கத்தை சமுதாயத்தில் ஏற்படுத்தப்போகிறது என்பது பற்றியே மக்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

அதாவது திரைப்படங்களை பார்ப்பவர்களில் பெரும்பாலும் 13 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்டவர்களே பெருமளவில் திரைப்படத்தை பார்ப்பவர்களாகவும் அதற்காக பெருமளவு நேரத்தை செலவழிப்பவர்களாகவும், காணப்படுகின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பலத்தரங்கு



— ஊடுருவி

☐ 15 வருட அரசியற் புயலில் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் அண்மையில் புதியதொரு மக்கள் கட்சி உதயமாகியுள்ளதாம்.

இது குறித்து அன்பர் ஒருவரின் மனத்துடிப்பில் தமிழ் மக்கள் மத்தியில் பலகட்சி ஜனநாயகம், மாற்று கருத்துகளுக்கு இடம் என்பன மகிழ்வு தரும் விடயம். அடிப்படைப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் வெறும் அலுவலகங்கள் அமைப்பதில் என்ன பயன்?

பல கட்சி ஜனநாயக அடிப்படையில் இன்னும் கட்சிகள் முளை விடட்டும். ஆனால் தமிழ் மக்கள் பிரச்சினையில நவக்கிரகங்கள் போல் திசைக்கொன்றாய் இருப்பது ஏன்? என நொந்து கொண்டார் அருகிலிருந்த மற்றொரு அன்பர், வரலாறு பாடம் புகட்டும் என ஆறுதல் கொடுத்தார்,

☐ போரினால் களைப்படைந்த மக்கள் தமது அரசியற் பொது நடவடிக்கைகள் குறித்து மிகவும் சலிப்புற்று விட்டார்கள். அது தவிர தங்கள் தலைவிதியை முன்னெடுத்துச் செல்லும் அரசியல் தலைமைகளின் நடவடிக்கைகள் குறித்தும் அதிருப்தி கொண்டுள்ளனர் என்பதும் உண்மை. இதன் விளைவாக அவர்களது அரசியல் நடவடிக்கைகளையும் மக்கள் கேலிக் கூத்தாகப் பார்க்கும் மனோபாவம் துயரத்திற்குரியது தான் - என குறைப்பட்டார் மூத்த போராளி ஒருவர்.

மக்கள் பார்வையில் நியாயம் இல்லை எனக் கூறுகிறீர்களா என்றார் அருகில் இருந்த நண்பர்.

பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்ட விடுதலைப் போரில் இதுவரையும் ஒரு நிம்மதியை காணாத நிலையில் மாபெரும் பேரணியின் முடிவில் பொப்பிசையும் சினிமாப் பாட்டுக் கச்சேரியும் நடாத்தினால் ஏன் மக்கள் கேலிக் கூத்தாகப் பார்க்கமாட்டார்கள்!

☐ சித்தாரா இசை நிகழ்ச்சியன்று, யாழ் நகர் மக்களுக்கு இரட்டிப்பு சந்தோஷமாம். ஒன்று இசை நிகழ்ச்சியில் சித்தாரா குழுவினர் பருக்கிய இசை விருந்துப்பானம், மற்றையது, இரவு நேரத்தில் தங்களுடைய நகரமும் சந்திகளும் தெருக்களும் எப்படியிருக்கும் என அங்கலாய்த்தவர்களுக்கு அதனை கண்டு களித்தது. இதனை விட இளவட்டங்களுக்கும் ஒரே பூரிப்பாம். பூரிப்பில் கலந்து கொள்ளாத பல (குஞ்சு) குமருகள் கூனிக்குறுகி கையது கொண்டு மெய்யது பொத்தி சித்தாராவின் பானத்தை வெகு சிரமத்துடன் பருகினார்களாம்.

எனதருமை தமிழ் கலாசாரமே
நீ புதையுண்ட புதைகுழியை
எங்கே தேடுவேன்?

☐ கிரிக்கெட் அணி, வலைப்பந்தாட்ட அணி, வடபகுதி இளைஞர் யுவதிகள் அணி என பல அணிகள் தென்பகுதி சென்று இன ஐக்கியத்தை வலுப்படுத்தி வருகின்றனவாம். இதன் ஏற்பாட்டில் மக்கள் மனம் கவர்ந்த தளபதிக்கு யாழ்ப்பாணச் சீவனுகள் சில பக்க பலமாக உள்ளனவாம்.

பரவாயில்லை. இன ஐக்கியம் வரட்டும். இனியும் போரினுள் வாழ முடியாது. ஆனால் ஒரு சிறு கேள்வி

ஒவ்வொரு நாளும் காங்கேசன்துறையில் இருந்து கொழும்புக்கு ரயில்கள் ஓடிய போது, பலாலியில் இருந்து இரத்மலானைக்கும் திருகோணமலைக்கும் பயணிகள் விமானம் சேவையில் ஈடுபட்ட போது, ஊரின் மூலை முடுக்கெல்லாம் 'மடத்து பஸ்' ஓடிய போதும் வராத இன ஐக்கியம், 200 வருடச் சேமிப்பை கரியாக்கிய போருக்கு பின்னர், எல்லோர் வீடுகளிலும் துவக்கினாலோ அல்லது ஷெல்லினாலோ அல்லது பொம்பரினாலோ சாகடிக்கப்பட்ட அல்லது காணாமற் போய் தொலைந்த உறவுகளின் படங்களை தொங்கவிட்டிருக்கின்ற இன்றைய நிலையிலா இன ஐக்கியம் வரப்போகிறது?

☐ மாநகர சபையினர் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பல, குறிப்பாக இன்றைய சூழவில் எல்லா விடயங்களிலும் மக்கள் மாநகர சபையின் கடைக்கண் திறப்பை பார்த்த வண்ணம் உள்ளனர். சபையின் கடைக்கண் மக்கள் பக்கம் திறந்தபாடில்லை. எல்லாக் கண்களும் கோவில் பக்கம் திறந்துள்ளதாம். கோயில் வீதிக்கு தண்ணீர் அடித்தல், பற்றை வெட்டுதல், வீதி திருத்துதல் — ...
ஏன் கோயில்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம்?

இரண்டாவது பிரஜையின் சிபார்சுக் கடிதத்துடன் கோயில்காரர்கள் எம். சி. எங்கும் திரிகிறார்களாம்!

☐ மாநகர சபையின் பொறியலாளர்களுக்கு இரட்டிப்பு வேலை! ஒன்று வழக்கமான பொறியியல் வேலை, இரண்டு, முதலாவது பிரஜையின் சிபார்சுக் கடிதத்துடன் வரும் வேலைகள். அப்படி என்ன வேலை இரண்டாவது?

அண்மையில் ஒருவரின் வீட்டு மலசல கூடம் அடைத்து விட்டதாம். அவர் முதலாவது பிரஜையின் வால்பிடி/எடுபிடி உடனே முதலாவது பிரஜையின் சிபார்சுக் கடிதம் பொறியியல் பிரிவுக்கு பறந்து வந்தது.

போ — பார்வையிடு — திருத்துக.

விழி பிதுங்க மனம் சுருங்க மாநகர சபைப் பொறியியலாளர் வெளிநாட்டு உதவி நிறுவனம் ஒன்றின் பொறியியல் பிரிவுக்கு தாவ தருணம் பார்த்துள்ளாராம்.

☐ 512-வது படையணியின் தளபதி சுஸந்த மென்டிஸின் ஏற்பாட்டில் துரையப்பா விளையாட்டரங்கில் பிரமாண்டமான இசை நிகழ்ச்சி அண்மையில் நடந்தேறியது யாருக்கும் தெரியாததல்ல. 20க்கும் மேற்பட்ட பாடகர்கள் இரவிரவாக பாடினார்களாம். மக்களும் இரவிரவாக பார்த்து ரசித்தனராம். சில வருடங்களுக்கு முன்பு இதே சுற்றயலில் தேனிசை செல்லப்பா சொர்ணலதா மற்றும் பல உள்ளூர் கலைஞர்களது இசை நிகழ்ச்சி அரங்கேறிய போதும் இப்படித்தான் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தனர். இசை நிகழ்ச்சி தொடக்கத்தில் தளபதி மென்டிஸ் உரையாற்றினார் நாம் ஆயுதக் கலாசாரத்தை வெறுக்கின்றோம் - என்றார்.

ரசிகப் பெருமக்கள் எல்லோரும் விசிலடித்துக் கை தட்டி ஆரவாரப்பட்டனர்; அடுத்தது, இன்று இந்த நிகழ்ச்சிக்கு வரமுடியாமல் இருக்கும் ஆட்களுக்கும் ஆயுத கலாசாரத்தை கைவிட்டு விட்டு (பாட்டு கேட்க) வரச் சொல்லுங்கள் - என்றார். இன்று வரை பல்லாயிரக்கணக்கான மக்களும்போராளிகளும் போராட்டத்திற்காக உயிர் நீத்த பின்பு பாட்டுக் கேட்கவா ஆயுதத்தை போடச் சொல்கிறீர்கள் ஐயா நிகழ்வில் கலந்து கொண்ட நண்பன் ஒருவனும் 'மச்சான் Enjoy with us' என்றான். 'கருகத் திருவுளமோ சர்வேசா, கண்ணீரும் செந்நீரும் விட்டெல்லோ வளர்த்தோம்.

☐ ஜன்ஸ்ரீன் இன்றும் உயிருடன் இருந்திருப்பராயின் 'ராக்கிங்' இன் அழியமுடியாத் தன்மைக்கு ஒரு விஞ்ஞானச் சமன்பாடு தந்திருப்பார்.

எவ்வளவு கஷ்டம், துன்ப துயரம், இழப்புகள் வந்தாலும் எங்கள் தேசத்தின் நாளைய சிற்பிகள் 'ராக்கிங்' அரக்கனுடன் கைகோர்த்த படி இன்னமும் நாட்டை செதுக்குகிறார்களாம். எங்கே? - யாழ் பல்கலைக்கழகத்தில்.

வீ. சி. யும் மார்ஷலும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டு விட்டு எண்ணெயே முடிந்து விட்டது! இனி என்ன செய்கிறது?

வரப்பிரகாஷ், உன் மரணம் என்பசியை தீர்க்கவில்லை. எனக்கு இன்னுமொரு வரப்பிரகாஷ் வேண்டும் என்கிறது ராக்கிங் அரக்கன்.

☐ குடாநாட்டு மக்கள் கொழும்பு மற்றும் தென்பகுதி செல்வதென்பது தற்போது ஒரு இமாலயச் சாதனை தான். அவ்வளவுக்கு கெடுபிடிகள், பிரச்சினைகள்.

அவ்வாறு ஒருவர் பயணம் புறப்படுவது என்றால், கிராம சேவகர் அனுமதி, உதவி அரசாங்க அதிபர் அனுமதி ஆகியன பெற்று இராணுவ அதிகாரியிடம் இறுதியில் செல்ல வேண்டும். இவ்வாறு தனது பயணத்திற்காக இராணுவ அதிகாரியிடம் சென்ற ஒருவருக்கு, விண்ணப்பம் நிரம்பியது பிழை, தனித்தனி ஆங்கில எழுத்துக்களில் நிரப்பப்பட வேண்டும் என நிராகரிக்கப்பட்டுள்ளதாம். இது தவிர நிபந்தனைகளின் அடிப்படையில் குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகின்றதாம்,

குடாநாட்டு மக்கள் இலகுவாக பாஸ் பெற புதிய நடைமுறைகள் என்ற வெறும் செய்தியைத் தவிர வேறொன்றும் அங்கு இல்லை - என்ற பாதிக்கப்பட்ட அன்பர், இப்படி நிலைமையாயின் எப்படி நாங்கள் ஸ்ரீலங்காவின் பிரஜை எனக் கூறுவது? என்றார்

# கோவைகள் சுமக்கும் கழுதையாக
# வடக்கு கிழக்கு மாகாணசபை

— இராசகிளி —

பொருளாதார இராணுவ அரசியல் நெருக்கடிகளுக்குள் ஸ்ரீலங்கா அரசு படிப்படியாக சிக்கிக் கொண்டு வருகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டமும் தாதிமார் மற்றும் மருத்துவத்துறை சார்ந்தவர்களின் வேலை நிறுத்த முன்னறிவிப்புகளும் ஐ.தே. கட்சி ஏற்படுத்திவரும் அரசியல் நிர்ப்பந்தங்களும் அரசை தர்மசங்கடத்திற்குள்ளாக்கி வருகின்றது. இலகுவில் வெற்றி என்ற இலக்குடன் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் தேக்க நிலை ஒரு புறமும் அரசியல் தீர்வு பற்றிய இறுதி வரையறைக்கு வர முடியாத சிக்கல்கள் மறுபுறமும் கொழும்பு அரசாங்கத்தினுள் குழப்பமான சூழ்நிலையை கோடி காட்டுகின்றன எனலாம். எனினும் கொழும்பு அரசின் கையாலாகத்தனம் அல்லது கையறு நிலை குறித்து கைகொட்டிச் சிரித்து மகிழ்ச்சி ஆரவாரப்படக்கூடிய நிலையில் தமிழ் மக்கள் இப்போதும் இல்லை என்பது எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது நழுவிப் போய்க் கொண்டிருக்கும் நிலையில் அன்றாடம் எழும் புதுப்புது பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவல வாழ்வு தான் இலங்கைத் தீவெங்கும் தமிழ் மக்களுக்கு வாய்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தான் வட-கிழக்கு மக்களின் தனித்தன்மையை பேணிப் பாதுகாக்கும் வகையில் 1987 ஒப்பந்தத்தின் வாயிலாக மாகாணசபை அறிமுகப்படுத்தப்பட்டது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். எனினும் வடக்குக்-கிழக்கு மாகாணசபை மக்கள் தலைமைத்துவமின்றி வெறுமனே கோவைகளைசுமக்கும் கழுதையாக மாறியிருக்கின்றது. வடகிழக்கு மாகாண மக்களின் தனித்தன்மை காக்கும் சபையாக இது இல்லாதது தமிழினத்தின் சாபக்கேடாகும்.

அண்மையில் திருகோணமலை விக்னேஸ்வர மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் இரண்டாவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு குரல் எழுப்பப்பட்டுள்ளது.

வடகிழக்கு மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்கான போராட்டத்தில் ஒரு கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபையினால் தமிழ் மக்கள் பெற்ற நன்மைகள் என்பது கடுகிலும் சிறிதே. ஆனால் தென் இலங்கையில் மாகாண சபைகள் தமது இரண்டு பதவிக்காலத்தை பூர்த்தி செய்து மூன்றாவது தேர்தலுக்கும் தயாராகி வருகின்றன. வடகிழக்கு மாகாண சபை செயலிழந்து போனமைக்கு யார் காரணம் என்று பிரேத பரிசோதனை செய்வது காலங்கடத்தும் ஒரு நிகழ்ச்சியாகவே முடியலாம். தென்இலங்கையில் மாகாண சபைகளின் பதவி நாற்காலிகளை பிடிப்பதற்காக போட்டியிடுபவர்கள் வடகிழக்கு மாகாண சபையின் ஸ்தம்பித நிலை குறித்து அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. போர் முனைப்புகள் ஒரு புறத்திலும் அரசியல் தீர்வு குறித்த கதைகள் மறுபுறத்திலுமாக இழுத்தடிப்புகளே தொடர்கின்றன. தீர்வுப் பொதியென்றும் மாற்று ஆலோசனைகள் என்றும் காலங்கடத்தும் கைங்கரியங்கள் நீடிக்கின்றன.

வட-கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா அவ்வப்போது குறிப்பிட்டாலும் கூட அது தொடர்பான காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய தமிழ் கட்சிகள் டக்லஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு ஆதரவு காட்டுவதில்லை என்பது ஒரு புறம் போக மறுபுறம் ஈ.பி.டி.பியினர்கூட இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வளவு தூரம் இதய சுத்தியுடன் உள்ளனர் என்பதும் கேள்வியே. இந்நிலையில் அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பின் கீழ் தமிழ் மக்களுக்கு என புதிய வகையான நிர்வாக அலகுகள் அறிமுகப் படுத்தப்படும் என்று கூறிய உத்தரவாதங்கள் எல்லாம் கால நதியில் கரைந்து போய்க் கொண்டிருக்கின்றன. எனினும் வட-கிழக்கு மாகாண சபை நிர்வாகம் அதிகாரிகளால் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப கையாளப்படும் ஒன்றாகவே தொடர்ந்து கொண்டிருப்பது மக்களுக்கு சங்கடமானதாகவே உளளது.

அவ்வகையில் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கென கடந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட பணத்தில் சுமார் பதினெட்டுகோடியே அறுபத்தேழு லட்சம் ரூபா பயன்படுத்தப்படவில்லை என்ற தகவல் சாதாரண மக்கள் எவரையும் கவலை கொள்ளச் செய்யக் கூடியதாகும் மாகாண நிர்வாகத்திற்கு பொறுப்பான அதிகாரிகளின் அசமந்தப் போக்குத்தான் இதற்குக் காரணம் என்னும் பொது மக்களின் நலனில் அக்கறை உள்ள எவரும் விசனிக்காமல் இருக்க முடியாது. அரசியல் தலைமைத்துவம் வழங்கப்படாத நிலையில் அதிகாரிகளின் இத்தகைய அசமந்தப் போக்குகளை சரி செய்வது சாத்தியப்படக் கூடியதொன்றல்ல. எனவே தான் மாகாண சபைக்கான அரசியல் தலைமைத்துவத்தை ஏற்படுத்தக் கூடிய வழிவகைகள் காணப்பட வேண்டியது தேவையாகிறது. குறுகிய கட்சி - பிரதேச நலன்களுக்கப்பாற்பட்டு தமிழ் மககளின் ஒட்டு மொத்த நலன்களை பேணுவதற்கான திசை வழியில் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு அரசியல் வழிகாட்டல் வழங்குவது ஒரு முதற்படியாக அமையலாம். எனினும் இதனைக் கூட நிலைநாட்டுவது மிகவும் கடினமானதாகவே இருக்கிறது.

ஏனெனில் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தக்கூடிய திடசங்கற்பமும் துணிவும் அரசாங்கத்திற்கு இருப்பதாக இல்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு உத்தரவாதம் வழங்கும் மனோநிலை அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்ற ஐயப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது அத்துடன் வடகிழக்கு மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் தேர்தலை நடத்தக்கூடிய சக்தி அரசாங்கத்துக்கு உண்டா என்ற கேள்வியும் எழுகிறது.

மேலும் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்ட சக்திகளின அரசியல் செல்வாக்கு குறித்து அடிக்கடி கேள்விஎழுப்பப்படு நிலையில் போராடிக் கொண்டிருப்பவர்கள் பேச்சுவார்த்தை மேசைக்குத்திரும்பினால் வழங்கப்படக்கூடிய மிகப் பெரியவிடயமாக மாகாண நிர்வாக அதிகாரம் கருதப் படுவதாகவும் கூறப்படுகிறது அதாவது தலதா மாளிகைககுண்டு வெடிப்பிற்கு பின்னர் விடுதலைப்புலிகள் மீது உத்தியோகபூர்வ தடை விதிக்கப்பட்டிருந்தாலும் கூட பேச்சு வார்த்தைக்கான கதவுகள் முற்றாக மூடப் படவில்லை என்று முக்கிய அமைச்சர்கள் அடிக்கடி குறிப்பிடுவது இங்கு நினைவு கூரப்பட வேண்டியதாகும்

எனவே தான் வடகிழக்கு மாகாண சபைக்கான அரசியல் தலைமைத்துவம் வழங்கப்படுவது என்பது அண்மையில் நடக்கககூடியதொன்றாக தெரியவில்லை. 1990-ல் முடமாக்கப்பட்ட வடகிழக்கு மாகாணசபை மீண்டும் புனர்வாழ்வு பெற வேண்டும் என்பதே புதுடில்லிக்கு உவப்பானதாக இருக்கக்கூடும். ஆனால் அது தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு பரிணாமம் பெறுவதை கொழும்பின் பேரினவாத சக்திகள் சகித்துக் கொள்ளுமா என்பது கேள்விக்குரியதே. □

அரசியல் அரங்கம்

# மக்கள் சக்திக் கழகம் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடாது

**சி. வீ கே சிவஞானம் தெரிவிப்பு**

மக்கள் சக்திக் கழகம் ஓர் அரசியல் கட்சியல்ல. அரசியல் ரீதியான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப் படமாட்டாது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண மக்களை ஊக்குவிப்பதே இக்கழகத்தின் நோக்கம் என புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள மக்கள் சக்தி கழகம் எனும் பொது அமைப்பின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை கடந்த வியாழனன்று நடத்திய அவர் மேலும் தெரிவிக்கையில், எம்மோடு கருத்தொருமித்த அமைப்புகள் எம்முடன் இணைந்து மக்களின் பிரச்சினைகளை ஆற்ற ஓரளவாவது முயலலாம் எமது முக்கிய பணிகளில் ஒன்றாக நுகர்வோர் பாதுகாப்புத் திட்டமுமே இருக்கும், இடத்துக்கிடம் விலை வேறுபாடு மற்றும் அலுவலக மட்டங்களில் இடம் பெறும் ஊழல் அஷ்பிரயோகம் என்பவற்றை தட்டிக்கேட்டு மக்களுக்கு நீதி இடைக்கச் செய்வதே எமது கழகத்தின் பணியாகும்' மக்கள் எந்த விடயமோ பிரச்சினையோ பற்றி வெளிப்படையாக எதுவும் பேச முற்படுவதில்லை இந்நிலையில் இத்தகைய அமைப்புகள அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஓரளவாவது தீர்க்க உழைக்கும் என்றார்.

இந்திய இராணுவத்தினர் இருந்தபோது போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பவற்றை வலியுறுத்தி கறுப்புப் பட்டி போராட்டம் போன்றவற்றை நடத்திய நீங்கள் இப்போதும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்களா என்பது உட்பட பல்வேறு வினாக்கள் தொடுக்கப்பட்டபோதும் அரசியல் தொடர்பானவை எனக்கூறி திரு. சி. வி. கே. சிவஞானம் பதில்தர மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தககது.

# ஆதனவரி நிலுவைகள் பதிவு அழிக்கப்பட வேண்டும்

ஆதன வரி நிலுவைகள் யாவும் பதிவு அழிக்கப்பட வேண்டும் என்று வட மாநில ஒய்வூதியர் சங்க சம்மேளனத்தின் சார்பாக அதன் தலைவர் சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மாநகர முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனுக்கு எழுதிய கடிதமொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில், மக்களால தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின சபை தற்போது பதவிப் பொறுப்பில் இருககிறது எனவும், எனவே 1985 முதல 31-12-97 வரையிலான காலப்பகுதிககுள்ளான ஆதனவரி நிலுவைகள் பதிவு அழிக்கப்பட வேண்டும் எனவும், இதற்கான சட்ட ஏற்பாடுகள் உண்டெனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## யாழில் 8000 பேர் கைம்பெண்கள்

கடந்த எட்டு வருடங்களில் மட்டும் சுமார் எட்டாயிரம் பெண்கள் யாழ் மாவட்டத்தில் தமது குடும்பத் தலைவர்களை இழந்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இது தெரிய வந்திருப்பதாக உளவியல் நிபுணர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

# நெருக்கடிகள் மிகுந்த காலகட்டத்தில் நயத்தக்க ஒரு நாட்டுக்கூத்து

நவீன நாடக அரங்கின் ஒளி, ஒலி, திரை வசதிகளோடு குறுகிய நேர அவகாசத்தில் எமது பழம் பெருங் கலைகளில் ஒன்றான நாட்டுக் கூத்தினை மேடையேற்றி வழி காட்டியவர் அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் என்பது யாவரும் அறிந்த செய்தி அவரின் அடியொற்றி நாட்டுக் கூத்துக்களை அரங்கேற்றி, கற்றவரும் மற்றவரும் நயந்திட வைக்கும் பெரும்பணியினை ஆற்றி வருபவர்களிலே, இன்று குறிப்பிடத்தக்கவர் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் 'பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் நிறுவுனரான அவர் 19.04.98 ஞாயிறன்று நல்லூர் இளங் கலைஞர் மன்ற மண்டபத்தில் மேடையேற்றிய ஆட்ட நாட்டுக் கூத்துத்தான் 'வேழம் படுத்த வீராங்கனை'

இவ் பிடத்தில் 'ஆட்டம்' என்பதை நாட்டுக்கூத்துக்கு அடை மொழியாகச் சேர்த்திருப்பது மிகவும் அர்த்தம்

## வேழம் படுத்த வீராங்கனை

**நெறியாள்கை : செ. மெற்றாஸ்மயில்**

**விமர்சனம் : சொக்கன்**

பொதிந்ததாகும். குதித்தல் என்ற பெயரடியாகத் தோன்றிய (நாட்டுக்) கூத்து, ஆட்டம் இல்லாமலே மேடையேறி வருவதும் அண்மைக் காலங்களிலே அவதானிக்கப்பட்ட நிலையில், ஆட்ட நுணுக்கங்களை உள்ளடக்கிய 'வேழம் படுத்த வீராங்கனை' ஆட்ட நாட்டுக் கூத்து என்று தன்னை அறிமுகம் செய்துள்ளமை முற்றிலும் பொருந்துவதே.

நாட்டிய நாடகம், கதகளி என்பன பாடல்களைப் பின்னணியில் இசைக்கும் பொழுது, அபிநயங்கள், முத்திரைகள் கொண்டு நபர்கள் கதை நிகழ்வினையும் உணர்ச்சிகளையும் புலப்படுத்துவனவாய் அமைந்துள்ளன இவற்றால் ஆடுவோர் அதிக சிரமமின்றிக் கலை வண்ணத்தை வெளிப்படுத்துவர். ஆனால் நாட்டுக் கூத்திலோ பாடுவதும் அபிநயப்பதும், வசனிப்பதும் நிகழ்த்துவதால் அதிற் பங்கு கொள்வோரின் ஆற்றுகையானது, சிரமம் கூடிய ஒன்றாய் அமைவது, கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுவதாகும்.

'வேழம் படுத்த வீராங்கனை, இத்தகைய சிரமங்களை அநாயாசமாகச் சமாளித்துச் சிறந்த முறையில், பாராட்டத்தக்க அளவு ஆட்டமும், பாட்டும், வசனிப்பும் ஒருசேர அமைந்து விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

வேலப்பணிக்கனைக் கோழை என்று இழித்துப்பேசி, வாய்த் துடுக்கும் துணிவும் கொண்ட அரியாத்தை சிலவேளை யானையைப் பிடித்து வரக் கூடும் எனவும் அரசனுக்கு அறிவுறுத்துகின்றான்.

அவமானமும் அவலமும் தொடர்பிடித்துத்தள்ள வேலப் பணிக்கன் அரசவையில் நிகழ்ந்தவற்றை அரியாத்தைக்குக் கூற, அவள் தெய்வ ஆசி பெற்றுக் காடு சென்று யானையைக் கயிற்றால் கட்டிக் கொண்டு வருகின்றாள். இந்த வீரசாதனையால் வெட்கமும் பொறாமையும் மிகுந்த நீலப் பணிக்கன் தனது மனைவி மூலம் சூழ்ச்சி புரிந்து அரியாத்தையைச் சாகடிக்கின்றான். அவளின் பிரிவாற்றாத வேலப் பணிக்கன் அவளுடைய சிதையில் வீழ்ந்து உயிர் துறக்கின்றான். வீரம், மானம், சோகம் ஆகிய சுவைகள் நிறைந்த இந்தக் கதைக்குக்

## அரங்க நிகழ்வுகள்

தாளக்கட்டு, உணர்ச்சி வேறுபாடுகளைத் திறம்பட வெளிப்படுத்தும் நுணுக்கமான பலதரப்பட்ட ஆட்டங்கள், அவற்றிற்கு உகந்த ரசமான பாட்டுக்கள், வசனங்கள் (நாட்டுக் கூத்துப் பாணியில் வசனங்களை இழுத்துப் பேசாமல் உணர்ச்சிக் கிளர்வோடு நவீன நாடகப்பாணியில் பேசப்பட்டன) என்பவற்றால், 'வேழம் படுத்த வீராங்கனை' குறிப்பிட்டுக் கூறத்தக்க அளவு சிறந்திருந்தது.

இந்நாட்டுக் கூத்துக் கதை வன்னிப் பிரதேசத்தின் வீராங்கனையெனப் போற்றப் படும் அரியாத்தை என்பவளைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டதாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வன்னி



யிலே வன்னியர் என்று குறுநிலத்தலைவர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களுக்கு யானைகளைப் பிடித்து வழங்கிடும் பணியில் 'பணிக்கர்' எனப்போர் ஈடுபட்டு வந்தனர். நீலப்பணிக்கன் என்பவன் தனக்கு மனைவியாகக் கொள்ள நினைத்த அரியாத்தை, வேலப்பணிக்கன் என்பானுக்கு மனைவியானதால் சீற்றமும் பொறாமையும் கொண்டவனாய், வன்னி அரசனைத்தூண்டி வேலப்பணிக்கனை, வன்னியில் மதங் கொண்டு திரிந்த யானையைப் பிடித்து வருமாறு செய்கிறான். கூத்தில் பங்கு கொண்ட கூத்தரும் கூத்தியரும் உயிரளித்துள்ளனர் எனலாம். 'முறத்தினால் புலியை ஒட்டும் மறக்குலத் தமிழ் மங்கைக்கு' எடுத்துக்காட்டாய் அரியாத்தை விளங்கி இன்றைய காலத் தேவையை நிறைவேற்றுகின்றாள்.

வன்னி அரசன், வேலப் பணிக்கன், நீலப்பணிக்கன், அரியாத்தை வன்னிபரசனின் பட்டத்தரசி, நீலப் பணிக்கன் மனைவி, அமைச்சர் ஆகியோர் இந்த நாட்டுக் கூத்தின் முக்கிய பாத்திரங்கள், மேற் குறித்த பணிக்கர்களின் சக பணிக்கர்கள் கட்டியகாரர், ஏவலர் யானை, பாம்பு என்போர் உபபாத்திரங்கள்.

தலைமைப் பாத்திரங்களில் நெஞ்சில் நிறைந்து விட்டவர் நீலப் பணிக்கன் பாத்திரம் ஏற்று ஆடியும் பாடியும் உணர்ச்சிகளைத் துல்லியமாக வெளிப் படுத்தியும் நடித்த ஜோன்சன் ராஜ்குமார் என்பது எனது கருத்து. அடுத்து கூத்தின் நெறியாளரான மெற்றாஸ் மயில் ஏற்று நடித்த அரசன் பாத்திரமாகும். நெறியாள்கை, கூத்து நிர்வாகம் ஆகிய கருமங்களோடு பிரதான பாத்திரத்தையும் ஏற்ற அவர் அப்பாத்திரத்திற்கு நியாயம் வழங்கியுள்ளார், எனினும் அவருடைய ஆட்டமளவு, குரல் வளம் ஒத்துழைக்கவில்லை என்றுதான்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமூக விஞ்ஞானிகள் சங்க ஸ்தாபகர் சாள்ஸ் அபயசேகரா

**அருட்திரு. ஜெயசீலன்**

1970 களில் சிங்கள இளைஞர்கள் இருபதாயிரத்துக்கு மதிகமானோர் சுட்டுக் கொல்லப்பட்ட போதும் 80 களில் ஏராளமான தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு அல்லது காணாமற் போனபோதும், குரல் கொடுத்த சில சிங்கள புத்திஜீவிகளோடு தொடர்பு படுத்தியே சாள்ஸ் அபயசேகராவை அன்புடன் நினைவு கூர முடியும்.

1979 பயங்கரவாத தடைச் சட்டம் அமுலாக்கப்பட்டு இன்பம் செல்வரத்தினம் ராஜேஸ்வரன் உடல்கள் பண்ணைப்பாலத்தருகே காணப்பட்ட பொழுது, மலர்வளையம் சாத்தி, வீரகாளி அம்மன் கோவிலிலும், யாழ் மரியன்னை பேராலயத்திலும் 1979 டிசம்பர் 10-ல் மனித உரிமை தினத்தன்று உண்ணாவிரதம் அனுசரித்து மாலை நான்கு மணிக்கு பொதுக் கூட்டம் நடத்திய இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான இயக்க நண்பர்களுடன் (பாலாதம்பு, றெஜி சிறிவர்தனா, போல் கஸ்பர்ஸ் குறிப்பிடத்தக்கவர்கள்) சேர்ந்து கொண்டவர் சாள்ஸ் அபயசேகரா. அன்றைய தமிழ் அரசியல்வாதிகளிடையே காணப்படாத தீர்க்கதரிசன பார்வை அவர்களிடையே காணப்பட்டது.

1979-ன் பின் தெற்கிலும் வடக்கிலும் ஏற்படப் போகும் இரத்த வெள்ளத்தை உணர்ந்த அச்சிங்கள புத்திஜீவிகளுடன், இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தை ஆரம்பித்து, தெற்கில் தம் பிரசுரங்களாலும் கருத்தரங்குகளாலும் இனப்பிரச்சினை பற்றிய ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்திய பெரியார் அவர். மொழித் திணைக்களத்தின் செல்வாக்கையும் அவர் இதற்கென உபயோகித்தார்.

'பிரவாத' என்ற சஞ்சிகையை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை, சிங்கள மக்களுக்கு விளக்க முனைந்தார். அதில் அவர் இத்தீவின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்த ஓர் சமூக விஞ்ஞான அரசியல் சிந்தனையாளர் மாத்திரமல்ல. உலகளாவிய ரீதியில் நவீன தத்துவ சிந்தனைச் சிற்பிகளான மைக்கல்புக்கோவாஸ்ரர், பென்சமின், மிலான்குண்டேரா முதலியோரின் சிந்தனைகளை உள்வாங்கிய ஓர் இலக்கிய விமரிசகராகவும் விளங்கினார்.

தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிய தனது கருத்துக்களை உள்நாட்டு, வெளிநாட்டு மேடைகளில் முன் வைத்த போது சிங்கள பௌத்த பேரினவாதிகள் சிலரிடம் இருந்து எழுந்த பாரிய எதிர்ப்புக்கள், அச்சுறுத்தல்களின் மத்தியிலும் தன் நிலைப்பாட்டிலிருந்து அவர் பின் வாங்கவில்லை.

ஒடுக்கப்பட்டோரின் பக்கசார்பு சாள்ஸ் அபயசேகராவுக்கு அவர் ஊவா மாகாணத்திலும் வரட்சி நிறை அம்பாந்தோட்டை முதலிய இடங்களிலும் அரசாங்க அதிபராக பணிபுரிந்த காலங்களிலிருந்து வளரத் தொடங்கியிருக்க வேண்டும் அங்கு இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அரச அதிபராக கடமையாற்றிய 'லெயனார்ட் வுல்ப்' என்ற ஆங்கில நாவல் ஆசிரியரின் குறிப்பேடுகளையும், நாவல் சிறுகதைகளையும் வாசித்ததால் ஏற்பட்ட மனமாற்றமோ? 'லெயனார்ட் வுல்ப்' பின் தீர்க்க தரிசன தீர்வே ஈழத்தமிழருக்குஉகந்தது என ஜெகான் பெரேரா தன் அண்மைக்கால கட்டுரையில் குறிப்பிவேது கவனிக்கத்தக்கது.

வுல்பின் 'முத்துக்களும் பன்றிகளும்' என்ற சிறுகதையில் இரு தமிழ் வசனங்கள் குறிப்பிடப்படுவதும் 'பத்தேகம' என்ற சிங்கள மொழிபெயர்ப்பு பெற்றிருக்கும் 'A Village in the Jungle' என்ற குறுநாவலில் காயப்பட்டு ஓரங்கப்பட்டப்படும் காட்டெருமை போன்று பணக்கார சிங்கள முதலாளி ஒடுக்கும் வேடவன் சிலுண்டு எப்படி இறுதியில (இறகுமுன்) எதிரிமீது பாய்ந்த விறுவேர் என்று விளங்கியிருக்கும்,

இதுவே அவரை (சாள்சை 1990 களில் அரசே அக்கறை காட்டாத தம் சொந்த பொலிஸ், இராணுவ கைதிகளை, தமிழ்ப் போராளிகளின் சிறை வாசத்திலிருந்து மீட்க, இங்கு வரச் செய்தது. இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து, அரசு, ஆயர் கெனத்துடன் தன்னை பேச்சு வார்த்தைக்கு (1992/93) கட்டியனுப்பியது. தனது விருப்பத்திற்கு அப்பாற்பட்டது என்றார் அவர்,

போர் ஒரு பக்கம் நடக்க சமாதானம் செய்ய முற்படும் சிங்கள நல்லெண்ண வாதிகட்கும் உண்மை சமாதானத்தின் வருகைக்கும் நாளைய சமாதானத்திற்கு தேவை எது என்பதை இன்றே உணர்த்திய அவர் மறைவுஓர் பேரிழப்பு. □

# வாக்குகளை எண்ணும் ஜனநாயகத்தில் என்றும் எனக்கு நம்பிக்கையில்லை

— கலாநிதி ஏ.ரி. ஆரியரத்னா கருத்து

அண்மையில் யாழ் குடாநாட்டிற்கு விஜயம் செய்த சர்வோதயாவின் தலைவரும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான கலாநிதி ஏ.ரி. ஆரியரத்னா எமது வார இதழுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்த கருத்துக்கள் இங்கே தரப்பட்டுள்ளது. இந்நேர் காணலின் போது உடனிருந்த திரு. வேணுகோபால் தெரிவித்த கருத்துக்கள் தனியாகத் தரப்பட்டுள்ளது.

☐ உங்கள் வருகையின் நோக்கம் பற்றி...

சர்வோதயா இயக்கத்தை மீள் நிர்மாணம் செய்ய இங்கு வந்துள்ளேன். இதுவே எனது பிரதான நோக்கம்,

☐ இவ்வளவு காலமாக நீங்கள் ஏன் இவ்விடம் வரவில்லை?

இங்கு யுத்தம் நடப்பது யாருக்கும் தெரியும் அவ்வேளையில் நாம் எப்படி வந்திருக்க முடியும். இங்கு வருவதற்கு எந்த வித மார்க்கமும் இருந்திருக்கவில்லை.

☐ வடக்கில் சர்வோதயா இயக்கத்தின் மீள் உருவாக்கம் குறித்து உங்கள் மதிப்பீடு எப்படி உள்ளது?

நாடெங்கும் ஏறத்தாழ 12,000 கிராமங்களில் நாங்கள் வேலை செய்கிறோம் யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ 178 கிராமங்களில் யாழ்ப்பாண நிலைமை மந்த நிலைமை அடையும் வரை வேலை செய்தோம். இப்பொழுது குறைந்தது 30 கிராமங்களிலாவது நாங்கள் வேலை செய்து கஷ்டப்பட்ட மக்களுக்கு மிகக் கூடிய விரைவில் உதவ வேண்டும் என நினைக்கிறோம்.

☐ உங்கள் அலுவலக மீள் உருவாக்கம் பற்றி

அதிகப்படியாக எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை. ஏனெனில் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும்; வாகன வசதி இல்லை, வாகனங்கள் எடுத்து வர இன்னமும் அனுமதி இல்லை. எமது அலுவலக வீடும் உடைந்து விட்டது. இனி எல்லாவற்றையும் ஆரம்பத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியுள்ளது,

☐ சர்வோதயா இயக்கம், படையினரால் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் தொழிற்படவில்லை என பரவலாகப் பேசப்படுகின்றதே.

ஆம்; எமது நிலைமையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். திருமலையில், சில வேளைகளில், படையினரால் விடுவிக்கப்படாத பிரதேசங்க



ளில் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க கிணறு போன்ற கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டுள்ளோம். வடக்கிலும் சரி தெற்கிலும் சரி, நடைமுறைக்கு சாத்தியமாயின் செய்து முடிக்கின்றோம் யுத்தச் சூழலில், பிரச்சினைக்குரிய இடத்துக்கு செல்வது, அவ்விடத்திற்கு கொண்டு செல்வது என்பதான விநியோக முறை பெரிய பிரச்சினையாக உள்ளது

சுதந்திரமான அரச சார்பற்ற நிறுவனமானதும் பாரிய தேசிய இயக்கமும் ஆகிய நாம் மிகவும்

## நேர்காணல் : அனபன

கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அந்தப் பக்கத்திற்கோ இந்தப் பக்கத்திற்கோ உதவி செய்யக்கூடாது நாம் ஏழைகளுக்கும் உதவியற்றவர்களுக்கும் உதவுவதற்கு ஆவலாக உள்ளோம்.

☐ பொதுவில் படையினரால் விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு செல்வதில் உங்களுக்கு தடை ஏதாவது உள்ளதா?

இல்லை, இவை எல்லாம் எனது சொந்த முயற்சியில் தான் தங்கியுள்ளது. இதற்காக எனது உயிரையும் எனது சக வேலையாளர்களது உயிரையும் கொடுக்க வேண்டி வரும். ஏற்கனவே எனது வேலையாளர்கள் எட்டுப்பேர் இந்திய அமைதிப் படை காலத்தில் கொல்லப்பட்டு விட்டார்கள். எனவே அங்கிருந்து வேண்டுகோள் விடப்படுமாயின் நிச்சயமாக எமது முயற்சிக்கு எட்டிய வகையில் நல்லதைச்செய்வோம்.

☐ வன்னியில் இருந்து வேண்டுகோள் ஏதாவது விடப்பட்டதா?

இல்லை. எவரும் அவ்வாறு விடவில்லை.

☐ நீங்கள் வன்னி செல்வதில் ஆர்வமுடையவராக இருக்கின்றீர்களா?

ஆம். என்னால் இயன்றதை செய்வதற்கு இருக்கிறேன். பாதுகாப்பு படையினர் எம்மை தடுக்கின்றனர். நாங்கள் பல இடங்களில் பாதுகாப்பு படையினரால் நிறுத்தப்பட்டுள்ளோம். எனக்கு பாதுகாப்பு அனுமதி இலகுவாக எடுக்க முடியும். ஆனால் நான் அதை செய்யவில்லை. கடந்த கிழமை மட்டக்களப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சட்டம் இயற்றுபவர்களை அனுசரிக்கத்தான் வேண்டும்

— வேணுகோபால்
திடீர் அழிவுகளுக்கான முகாமைத்துவ அதிகாரி
சர்வோதயா

☐ உங்கள் பணி பற்றி ...

நான் திடீர் அழிவு முகாமைத்துவ பிரிவில் (Disaster management) திட்டமிடல் அதிகாரியாக உள்ளேன். சர்வோதயா தான் இலங்கையில் ஏற்பட்டுள்ள திடீர் அழிவுக்காக மக்களுக்கு முதன் முதலில் நிவாரணம் கொடுத்தது. இதன் பின்பு ஏனைய அமைப்புகள் முன் வந்தன. இலங்கை பூராகவும் 150 மில்லியன் ரூபா பணம் இத்திடீர் அழிவு நிவாரண



அழிவாக கொடுத்துள்ளோம், யாழ்ப்பாணத்திற்கு தனியாக 34 மில்லியன் ரூபா கொடுத்துள்ளோம்.

☐ இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு பணியாற்ற நீங்கள் செல்லவில்லையே —

நாங்கள் அங்கு போக முடியாமல் இல்லை போக முடியும். திருகோணமலையில் ஈச்சிலம்பத்தையிலும் மூதூரிலும், மட்டக்களப்பில் வாகரையிலும் நாம் பணியாற்றுகிறோம். ஈச்சிலம்பத்தையில் பெருவாரியான திட்டங்களை மேற்கொள்கின்றோம்.

☐ வன்னியில் உங்கள் வேலைத்திட்டங்கள் பற்றி —

வன்னியில், வவுனியாவில் இரு மாவட்ட நிலையங்கள் எமக்கு உண்டு. அங்கு வீடு கட்டிக் கொடுத்தல், கிணறு கட்டிக்கொடுத்தல் போன்ற வேலைத்திட்டங்களை அவர்களுக்கு கொடுக்கின்றோம். பிரச்சினைக்குரிய இடங்களுக்கு இராணுவம் உள்ளீடுகள் எடுத்துச் செலல விடாது. அத்தகைய இடங்களில் நாம் சட்டம் இயற்றுபவர்கள் (Law makers) அனுசரித்துத்தான் செல்ல வேண்டும். ஆதலால் நாம் ஒவ்வொரு திட்டமும் செய்வதானால் அரச அதிபருடாகத்தான் செய்கின்றோம்.

☐ பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறுவதில் உங்களுக்கு பிரச்சினை இருக்கவில்லையா...

அப்படி எதுவும் எமக்கு இருக்கவில்லை எமது திட்டங்களுக்கு தடை செய்யப்பட்ட பொருட்கள் எதுவும் எடுத்துச் செல்வதில்லை.

☐ யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளிக்கவில்லையே

இங்குள்ள நிலைவேறு. யாழ்ப்பாணம் ஏனைய மாவட்டங்களில் உள்ள நிருவாக அமைப்பில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. தனித்துவமானது. வேறு மாவட்டங்களில் எமது திட்டங்களை மேற்கொள்வது போல் இங்கு செய்ய முடியாது ஏனெனில் பாதுப்புப் பிரச்சினை. இப்பிரச்சினை நீங்கி சுமுகமான நிலை தோன்ற சற்றுக் காலம் எடுக்கும். உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இதன் அடிப்படையில் கட்டுப்பாடுகள் உண்டு. இதனால அவர்கள் இயங்குகிறார்கள் இல்லை, இதற்குள் சுமுகமான நிலை தோன்ற நாம் முயற்சி செய்ய வேண்டும். இதற்கு நாம் கலந்துரையாடல் நடத்தி மாற்றி அமைக்க வேண்டும்.

☐ இங்குள்ள மக்களைப் பற்றி...

இங்குள்ள மக்கள் மிகவும் விரக்தியடைந்த நிலையில் உள்ளார்கள். மிகவும் கஷ்டப்பட்டு களைப்படைந்து விட்டார்கள். என்ன செய்கிறோம், என்ன செய்ய போகிறோம் என்பது பற்றி அறியாதவர்களாக உள்ளார்கள். இவர்களுக்கு நாம அடிமட்டத்தில் Key மட்டத்தில் புத்துணர்வு கொடுக்க வேண்டும். அவர்களுக்கு உதவியாக 1000/= அல்லது 5000/= கொடுத்து உதவினால் மிகவும் நல்லது வறுமையில் உள்ளவர்களுக்கு - மற்றையவைகளைப் பற்றி யோசியாத கட்டத்தில் உள்ளவர்களுக்கு இது மிகவும் பயன்படும்.

☐ இம் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் அவர்களது அரசியல் பிரச்சினையே. அதற்கு முன்னதாக இத்தகைய உதவி நடவடிக்கை பிரயோசனப்படுமா? அரசியல் தீர்வு தானே முதலில் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

அரசாங்க சார்பற்ற நிறுவனமான நாம் அரசியல் நிலைப்பாட்டை மாற்றியமைக்கக் கூடியதாக வேலைத்திட்டத்தில் ஈடுபட முடியாது. ஆனால் அடிமட்டத்தில் எமது கொள்கைகளில் சிலபற்றை ஈடுபடுத்தி எடுக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் எத்தனை அரசியல் கட்சிகள் உண்டு. அவர்களிடையே ஒற்றுமை உணர்வுகள் நேர்மையான கொள்கைகள், தீர்க்கமான நோக்கம் (Main Objectives) ஏதாவது இருக்கின்றதா என்றால் சந்தேகம் தான்.

# ஆறாத சோகமும் ஊதைக் காற்றும்

— கல்வயல் வே. குமாரசாமி

விண்தழுவி நின்றுயர்ந்த
ஆண்பனையும் பெண்பனையும்
வெண்ணிலவும் சூரியனும்
விடிஞ்சு வெயில் வார்த்தாலும்
புண்சுமக்கும் நெஞ்சுகளை
பூவாய் வளர்த் தெடுத்த
பண்பாட்டுச் சின்னங்கள்
மண்ணடியின்மேலே வடலிக்
குருத்திழுக்கும்
கண்ணவிஞ்ச கூட்டம்.

'நொங்கறுத்த சின்ன அணிலுக்குச்
சங்கிலியன்
தங்கப் பவுண் உருக்கி
உச்சந் தலைமேலே
ஊத்தி உயிரெடுத்தான்'
—ஆச்சி கதை—
வந்து வந்து
வேர்த்து வடிய வைக்கும்
நெஞ்சிடிக்கும் கேட்கையிலே.

அசோக மகாராசன் சேனை
அழிதுழும்பில்
பிசா சாக்கப் பட்ட ஒரு பேத்தி
வடலியாய்
கருக்கேந்தி நின்றதுபோல்
காற்றெல்லாம் ஓர்நாள்
உருக்கொள்ளும்
ஊழிக்கூத் தாடும்
தருமச் சுருக்கு முடிச்சிறுக்கும்
கட்டறுக்கும் சுட்டெரிக்கும்;

தோப்புத் தறிச்சழித்துக்
காப்பரணாய் ஊர்முழுதும்;
கூப்பிடறியேடி கொலைகாரப்
புன்சிரிப்பைப்
பாப்பா அறியும் பார்
பால்வடியும் பிஞ்சு முகம்
மாப்பாலும் இல்லாமல்
தாய்பாலும் இல்லாமல்
சாப்பாடு இல்லாமலே
சாக்காட்டி உண்மைகளை.

கலிங்கம் அழிச்ச கணவானாய்
—உன் வார்த்தை
* 'தௌலியாய்'
நாவற் குழியில் கிடங்குகளில்
செம்மணி மண்ணில் செறிந்து
சிறுகுதிர்ந்த
அம்மணிகள் உதிர்த்த கண்முத்து
நீர் எரியும்
அக்கறைகள் அக்கறைகள்
அக்கறைகள் அக்கறைகள்

எந்த மருந்தாலும் மாற்ற முடியாத
இந்தப் படுகாய ரத்தக் கசிவை நீ
செவ்வரத்தம் பூவாக்கிக் காட்ட
நினைக்கிறியே!
ஒவ்வாத பேராசை
ஊனப்படுத்தி விட்ட
இவ்வரக்கக் கூட்டம் செய்
இரத்தக் கறைகழுவ
மாணிக்க கங்கை மணலாறாய்
மாறும் பார்!

நாணத்தால் மாவலியாள்
ஆறா மணலாறாய்
எச்சில் சுரக்க முடியாமல் தான் ஏங்கி
நாவரண்டு செத்து
நாறிப் புழுத்திடுவாள்
உன்னிருப்புப் பாதைக் கினிமுல
வேரில்லை—
சின்னாச்சிப் பேத்தி வாய் புலம்பல்
கேட்கிறது.

மல்லிகைப்பூச் சோறா மென்று
அள்ளிக் கொடுத்த அரிசிப்
புழுக்கூடு கண்ணில் நெளிகிறது,

மேச்சலுக்குப் போனபல
நாகு நாம் பண்களைக் சாச்சுக்
கொண்டார் எங்கே?
ஆர்க்கும் தெரியாதோ?

பின்னால் இருக்கும் நிலாவரைப்
பாதாளம்
மின்னல் தனைவிட்டுப் பேதை
அளந்த கதை
கைதடியில் வெட்டிச் சரித்த
பனை யடியில்
மோதகம் பறிகொடுத்த
கிரிசா அழுகுரலாய்
கூதலொடு ஊதுகிற காற்றின்
ஒலி நீதமும்
ஆளி குடிக்கும் புயலாய் அவை வந்து
ஊதைக் காற்றாகி
கண்ணுறங்கா வேளையெலாம்
அந்தக் குரல்விடிய
ராவிடிய வீடுகளில்
வந்து வந்து
யன்னல் கதவுடு மூர்க்கமாய்
மோதி அறைந்து
குழறும் ஒலி முட்டிவிடும்
சேதி செவிகடந்து
சித்தத்தே தீக்கனலாய் .

கொழுந்து மடிஞ்சந்தக் குஞ்சு
துடிதுடிக்க
எத்தனை தீக்குச்சி
இரும்பர் கிழித்தனரோ?

* வட இந்தியாவில் தௌலி என்ற இடத்திலிருந்த அசோகனின் அரசகட்டளை சாசனம்

## போர்

போர்
சமாதானம்
அதிகாரப் பரவலாக்கல்
இம் மூன்றும் இனப்பிரச்சினை
தீர்க்கும் முக்கூட்டுக் குளிசை
உட்கொண்டால் தமிழினமே
தீர்ந்து போகுமெம் மண்ணிலே,

போர் என்றால்
சமாதானமில்லை
அதிகாரம் பகிர்வுமில்லை
ஆகவே மிஞ்சுவது
போர் போர் போர்
அழிவு, கொலை கற்பழிப்பு
தேசியத் தொழிலாகிவிடும்

அன்பு அறம் கருணை
போதித்த புத்தமகான்
தன் கண்ணீர் மல்கப்
பார்க்கின்றார்
என்னே நம் சீடர்கள்
புதிய புத்த மதம் காட்டுகிறார்கள்,
மன்னிக்கவும்
கலியுகம் எல்லாம் விபரீதம்
கண்ணை மூடிக் கொள்கிறார்.

— யாழமுதன்

# கவிதைக்கதிர்

## மொட்டையடிப்பு

வாழ்வுரிமை பறிக்கப்பட்ட தேசத்தில்
நாளெல்லாம் கூக்குரல்
நாளை விடியல் என்று
நித்தம் காத்திருப்பு
வேளைக் கொரு பேச்சு
வேகம் எல்லாம் போரிலே
சாக்காட்டை நிறைக்கின்ற யுத்தம்
சமாதானத்துக்கு ஆகுமா?

வேர் இருக்க மரம் நகர்ந்து
வேற்று நாட்டில் பதிவைப்புக்கள்
நகர மறுத்த மரங்களுக்கு
நாளெல்லாம் மொட்டையடிப்பு

— வளர்

வெண்பாப் போட்டி

## 'சீருடையார் செம்மையைச் சொல்'

ஆறாவது இதழில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய எமக்கு கிடைத்த வெண்பாக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து வெண்பாக்கள் இங்கு தரப்படுகின்றன,

நல்லார் போல் நடித்து நலங்கெட்ட
பொல்லாதன செயும் பொய்பராய் வாழாது - நல்லுலகில்
கருத்தாழமிக்க கற்றார் முன் நின்று
சீருடையார் செம்மையைச் சொல்.

— நீர்வைமணி

சீதைகள்தான் ஆனால் சிலைவளைக்க ராமரில்லை
நீதிக் குடைக்குச் சிலம்பில்லை — சீதனமாய்
காருமின்றி நாலுலட்சம் காசுமின்றி கற்புஒன்றே
சீருடையார் செம்மையைச் சொல்.

ச. முகுந்தன்

சில இலட்சத்தோடு சீர் வந்த வரனை
பல இலட்சம் பேசி பறித்தெடுத்தார் — இப்புவியில்
பேருக்குச் சீதனத்தை வேண்டாச் செல்வச்
சீருடையார் செம்மையைச் சொல்.

— புதுமைதாசன்

கல்லூரி மாணவரைக் காளையரை பூவையரை
எல்லோருக்கும் சோதனை எனவழைத்து • அரசபடை
ஊருக்குள் காணாமற் போனோரில் பதிவெழுதும்
சீருடையார் செம்மையைச் சொல்,

— வாணிகேள்வன்

பேருடைய பாடசாலைப் பெருமதில்தாண்டி
ஆருடைய கண்ணுக்கும் அஞ்சாது — கல்லூரி
சீருடையில் மினிசினிமா சிநேகிதருடன் சென்ற
சீருடையார் செம்மையைச் சொல்.

— வள்ளிமணாளன்

### முயன்று பாருங்கள்

தமிழ் இலக்கண அறிவை ஊட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் வெண்பா புனையும் போட்டி ஒன்றை அறிமுகப்படுத்துகின்றோம். கீழ்வரும் அடியை ஈற்றடியாகக் கொண்ட வெண்பாக்களைப் புனைந்து இரு வாரத்தினுள் காலைக்கதிர் த. பெ 145, யாழ்ப்பாணம் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் தகுதியானவை நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்

இந்த வாரத்திற்குரிய ஈற்றடி

'அரசின் இயல்பை அறி!'

'உண்மை தான் ராசம், ஆனாலும் பார் அங்க சனம் சாகேல்லையே. உந்தப் பேப்பர் எல்லாம் என்ன போட்டிருக்கு அறுநூறு, ஆயிரம் என்று பிள்ளைகள் இல்லை, அவைகளின்ரை அம்மா அப்பா என்ன பாடுபடுவினம். எல்லாம் எங்கடை தலையிலை என்ன எழுதி இருக்கோ அதுதான் நடக்கும், மோன் எழும்பி இருக்கிறான் ஏதும் கேட்டு கொடேன்.'

வீட்டை அடைந்ததும் முன் கதவை தள்ள அது பூட்டு இல்லாமலே திறந்து கொண்டது. அடுத்த கதவு திறக்க செல்கையில அனைவரும வீட்டை நெருங்கி விட்டனர். என்ன இது கதவு திறக்குதில்லை. அம்மா சொன்ன மாதிரி கதவு இறுகிக் கொண்டதே. அவன் பலமாக தள்ளினான். அவ்வளவு தான் 'படார்' என ஓசை வீட்டை அதிர்ந்தது. தேவன் சிதறி விழுந்தான்.

# கதவு

— அசோக் —

'என்ன ராசம் என்ன யோசனை மோனுக்கு எப்படி சுகமே' சேலைத் தலைப்பால் துடைத்தபடி வந்தபடி சின்னம்மா கேட்கிறாள். 'கொஞ்சம் சுகம் அக்கா என்னமோ அக்கா இந்த அகதி முகாம் வந்து, இங்க வந்த எத்தனை மாதம் ஆச்சுது இன்னும் ஊர் போய் சேர வழிவரயில்லை. அதுதான் இப்ப பெரிய தலையிடி இந்தக் கிழமைக்குள் அனுப்புவினமாம். 'அனுப்புவினம், அனுப்புவினம் எல்லாம் முடிந்த பின் தான் போலும்' அவள் குரலில் ஆதங்கம் ஒடியது. பிள்ளை சலிக்காதே எத்தனை கண்டு அனுபவிச்சா இனி இடி விழுந்தாலும் அசையாது. அப்படி உரம் ஏறிட்டு. தைரியமாய் இரு'. அக்கா உங்களுக்கு தெரியும் என்னைப்பற்றி ஏதோ அசாதாரணநம்பிக்கையும் தைரியத்திலும் நான் வாழ்கின்றேன். என்னமோ வீட்டை போய் என்ரை கிணற்றிலை தண்ணி அள்ளி குடித்துப் போட்டு செத்தாலும் பரவாயில்லை'.

விசர்க்கதை கதைக்காதே ஆம்பிள்ளை மூன்று அழகாய் ஒரு பெட்டை இதுகளை விட்டுட்டு சாகிற கதை கதைக்கிறாய். உனக்கு அங்க போனால் பிரச்சினை இல்லையே மூத்தவள் அவையளோட இல்லே'. உப்படி பார்த்தால் யாழ்ப்பாணத்திலை அரைவாசி சனமும் எங்களைப் போலத்தான். இனி இருந்து என்ன செத்து என்ன. அவள் கண்களில் கண்ணீர் கொட்டியது. "சீ... ... என்ன பிள்ளை இப்படி அழுகிறாய்.

'ஓம் அக்கா அவள் விம்மியபடி நான் ஓடி வரக்கே நகை எல்லாம் விட்டுட்டு வந்திட்டன். பிள்ளையார் கருணை இருந்தால் தாட்ட இடத்தில இருக்கும். நகை பணம் போகட்டும். காணிக்கும் அடையாளம் தெரியுதோ தெரியாது. சின்னம்மா நீட்டி முழக்கினா, என்னம்மா அப்படி இருக்குமே அந்தப் பெரிய அறைக் கதவு நான் தானே திறந்து விடுகிறனான்.

'ஓம், பிள்ளை திறக்க வேணும் என பலன் வீடு இருக்கும்'. சின்னம்மா மாமி நான் தான் வீட்டை போய் முதல் திறப்பன். நைலோன் நூலும், கயிற்று வாலும், அம்மாவுக்கு தெரியாமல் ஒளித்து வைத்தனான், நாங்கள் போய் இரண்டு மாதத்தாலே கொடி ஏற்றலாம்.

'டேய் விசரா கண்டபடி காலை வைக்கக்கூடாது, ஏதும் மிதிவெடி, கிளிவெடி, வெடியன் இருக்கும் பேப்பரிலே வாசிக்கல்லையே'. தான் பேப்பர் வாசிப்பதும் அதை அடிக்கடி தனக்கு கனவிடயம் தெரியும் என்பதை காட்டிக் கொள்வதில் சின்னம்மாவுக்கு அலாதி பிரியம்.

'ஓம் அக்கா நீங்கள் சொல்லுகிறது சரி டேய் இவ்வளவு நாளும் படிப்பு, அப்படி, இப்படி போட்டுது இனியும் போய் விளையாட்டு நினைப்புத் தான் அவள் குரலில் சற்றுக் கடுமை தோன்றியது. 'இல்லை அம்மா நான் அம்மா சொன்னால் தம்பியும் தங்கச்சியும் எங்கை அம்மா, அவன் கதை மாற்றும் விதம் கண்டு ராசத்துக்கு சிரிப்பு வந்தாலும் 'அங்க பார் விளையாடுதுகள். அவர்களைப் பார்த்ததும் அவளுக்கு கவலை தான் வந்தது. என்ன நிறமாய் இருந்த பிள்ளைகள் இப்படி மாறிப் போட்டுதுகள்'. சோற்றுக்கும் ஓலைக்கும் பஞ்சமே, என்னமாய் வைத்திருந்தேன் இப்ப எல்லாம் இப்படிப் பேசச்சுது நினைத்தபடி பெருமூச்சு விடவும், 'என்ன ராசம் பெருமூச்சு விடுகிறாய்,' மலை மாதிரி இருந்த மனுஷன்,' அவள் விம்மி விம்மி அழத் தொடங்கினாள் அழாதே ராசம். நான் தான் உன்னை அழப் பண்ணிப் போட்டன்.

என்ரை மனுஷன் சொகுசாய் வளர்த்தது. அப்படி, எனக்கு என்ன குறை விட்டது. முட்டு வேறு, இங்க வந்து எத்தனை முறை காச்சல் வந்தது. ஐயோ எல்லாத்தையும் விட்டுட்டு போட்டார். பாவம் அக்கா அவர் அங்கை இருப்பம் என்றார்; நான் தான் இழுத்து வந்தன். ஏனோ நான் வாழ்கிறன் என்றால் இந்தப் பிள்ளையளுக்காகத்தான்! அண்ணை அவை வெளிநாட்டில் இருந்து காசு அனுப்பாட்டில் எனக்கும் பிள்ளையளுக்கும் சமாதி தான் கட்டியிருக்க வேண்டும்'.

உண்மை தான் ராசம், ஆனாலும் பார் அங்க சனம் சாகேல்லையே, உந்தப் பேப்பர் எல்லாம் என்ன போட்டிருக்கு அறுநூறு, ஆயிரம் என்று பிள்ளைகள் இல்லை, அவைகளின்ரை அம்மா, அப்பா என்ன பாடுபடுவினம். எல்லாம் எங்கடை தலையிலை என்ன எழுதி இருக்கோ அது தான் நடக்கும். மோன் எழும்பி இருக்கிறான் ஏதும் கேட்டு கொடேன்'.

'அம்மா நாளைக்கு நாங்கள் ஊருக்கு போகலாமே', போகலாம் என்று அக்கா சொல்லுறா அம்மா எங்கடை வீடு உடைஞ்ச போய் இருக்குமே இல்லை அப்படி போனமாதம் பரிமளம் அக்கா கடிதம் போட்டவா தானே, எங்கடை வீட்டுப் பக்கம் சேதம் இல்லை என்றும் ஆனாலும் போய்ப் பார்க்கவில்லை என்று எழுதினவ தானே.

ஓம், ஓம் ஆனாலும் ராசம் ஆட்கள் இல்லாத வீட்டில் எல்லாம் களவு போய் இருக்கும். ஒன்றுமில்லை அக்கா என்ன மாதிரி காலம் ஓடிப்போட்டுது. நாம் நினைக்காதது எல்லாம் நடந்து முடிகிறது. இப்படி எல்லாம் அலைஞ்சு உலைஞ்சு ஏதும் எங்கடை சனத்துக்கு விடிவு வந்தால் நாங்கள் பட்ட கஷ்டத்திற்கு ஒரு அர்த்தம் இருக்கு. 'உண்மை தான் உண்மை தான்' சின்னம்மா அவசரமாக கூறினாள். ஆனால் எங்கடை கையில் என்ன இருக்குஎல்லாம் அவன் செயல். இவற்றை கேட்டுக் கொண்டிருந்த ராசத்தின் மகன், அம்மா எங்கடை, மூர்த்தி மாஸ்டரும் தாயும் தங்கச்சி இரண்டு பேரையும் கண்டனான் இங்க திரிகினமே. 'எந்த மூர்த்தி ராசம், சதாசிவத்தின்ரை மோனே, ஓம் ஓம் பாசம் தலையாட்ட. காலையிலும் கண்டனான். அவர் தான் சொன்னவர், நாளைக்கு காலமை கப்பலிலே ஏத்துவினம் என்று. என்ன மாதிரி கப்பல் சும்மா கிளாலிக்கடலில் வந்த மாதிரி. இல்லை தேவன் அது பெரிது இங்க நிற்கிற இவ்வளவு பேரும் ஏறலாம், அப்படியே அம்மா அங்க பாருங்கோ அம்மா இரண்டு அண்ணாமார் பதிஞ்சு கொண்டு வருகினம்.

ஓம் ராசம் நானும் வாறன் நாளைக்கு போறதுக்கு ஏதும் பதிவோ தெரியாது பிள்ளைகளும் அங்க இருக்கினம், 'சரி அக்கா நீங்கள் போங்கள் ராசம் எழும்பி தன் இரு பிள்ளைகளையும் கூப்பிட போனாள்,

அவர்கள் எதிர்பார்த்தபடி அங்க, இங்க என பதிஞ்சு, ராசத்தின் மக்கள் கப்பலையும், கடலையும் பார்த்து வியந்து, அந்த புது பிரயாணத்தில் பலமுறை சத்தியும் எடுத்தபடி ஊர் வந்து சேர்ந்தார்கள்,

வன்னிபாலை வந்த சனம் கண்டவர்கள் நின்றவர்கள் விசாரணை, அவர்களை கண்டதோ எப்படி பிரச்சினை என்போரும் 'மெய்ய அங்க பனடோல் பத்து ரூபாவோ' ராசத்துக்கு எரிச்சல் தான் வந்தது. நாங்கள் பட்டபாட்டிற்கு இவர்கள் வேறு.

தேவனுக்கு யாழ் வந்தாச்சு இனி ஊர் போக வேணும் இது தான் நினைப்பு சாலை எங்கும ஓடித்திரியும வாகனங்கள் ஆமியின் மின்னலென ஓடி மறையும மோட்டார் சைக்கிள் ஓட்டம தேவனுக்கு வியப்பாக இருந்தது.

வைரவர் கோயிலடியில் சென்று கும்பிட்டு குழாயில் நீர் பிடித்து குடித்தான. எங்கட வீட்டிற்கு நாலு காணி தள்ளி உள்ள வைரவருக்கு நான் தான் முந்தி கச்சான் வாய், வெள்ளி விளக்கு வைத்தனான், இனி ஊர் போய சேர்ந்ததும் பழையபடிவிளக்கு வைக்க வேணும்,

ரமேஸ், ரகவன் எல்லாம், ஊரில் தானே இருக்கினமாம, என்னோடு படித்த சுதன் வெளிநாடு போட்டானாம் மாமாவும எனக்கு வர்ணித்து கடிதம போட்டவர் தானே, அப்பா இல்லை நீ அம்மாவுக்கு துணையாக இருக்க வேணும இன்னும் இரண்டு வருடத்தில தம்பி வளர்ந்திடுவான அப்ப நீ வா என்றவர் தானே, அம்மா அப்பவும சொன்னவா நீ விரும்பினால் போ என்று, எனக்கு எப்படியும் வீட்டை வரவேணும் ஊரை பார்க்கவேணும் போன வருடமே திருவிழா நடந்ததாம அப்ப இந்த முறை நடக்கும் தானே.

'தம்பி என்ன யோசிக்கிறீர் அங்க உங்கடை அம்மா கூப்பிடுகிறா, அவன தாயிடம ஓடினான் வா தம்பி பஸ் நிக்குது போவம் 'சரி அம்மா ஓட்டோக்களும், மினிவானுகளும் சனத்தை இடம் கூட்டி செல்ல ஓடிபாடி திரிவது தேவனுக்கு வியப்பாக இருந்தது, அவன் சாமான்களை பஸ்ஸில் ஏற்றி தங்கையையும் தூக்கி கொண்டு ஏறினான்,சனம் எல்லாம் வியப்பாக பார்ப்பது போல அவன் உள்ளுணர்வு கூறியது. ஊர் போய் சேர்ந்ததும் வீட்டை வெளியே நின்று பார்த்தார்கள். ஓடுகள் சிதறிப் போய் இருந்தன. காணி பூரா புல் பூண்டுமாய் இருந்தன.

தேவன் நாங்கள் இப்ப மாமி வீட்டை போவம, வந்த களைப்பு தீர்ந்த பின் நாளை வந்து அப்பரவு ஆகுவோம் 'சரி அம்மா, அவன் தங்கையை தூக்கியபடி; விளையாட்டு காட்டியபடி சந்தோசமாக நடந்தான், அவர்களை அடையாளம் கண்டபலர், ஒருவரது புதினம் கேட்டதும வந்து தேநீர் குடித்து போகலாம என்று அழைப்பதுமாக இருந்தனர் ராசம் வரவு கண்டு அவனது மாமி குடும்பம் மகிழ்ந்தது. நாங்கள் வந்ததும் ராசம ஊரை வீட்டை திறந்து பார்க்கவில்லை காணி மட்டும சுற்றி பார்த்தோம். அதிலை என்ன மாமி நாளைக்கு காலமை போய் பார்ப்போமம. இப்ப களைச்ச போனோம்.

விடிந்ததும், முதலாக தங்கையை விட்டு, மாமா மாமியுடன், ராசம இரு பிள்ளைகளுடன் போனான அம்மா பெரிய அறைக்கதவு நான தான திறப்பன். எவ்வளவு இறுகிப் போய் இருக்கும் எவ்வளவு காலம திறக்கவில்லை ராசம கூற 'போ அம்மா, ஐயா திறந்த திறப்பை பார்ப்பன் நீ ஒதுங்கி நின்று பார் காணும் எனக்கு. உனக்கு ஊர வந்தத்தும் தலை, கால தெரியவில்லை பேசாமல் நட ராசம சந்தோசமான கோபத்துடன பேசினாள்.

தேவன ஓட்டமும,நடையுமாக நடந்தான. வீட்டை அடைந்ததும முன்கதவை தள்ள அது பூட்டு இல்லாமலே திறந்து, கொண்டது. அடுத்த கதவு திறக்க செல்கையில அனைவரும வீட்டை நெருங்கி விட்டனர், என்ன இது கதவு திறக்குதில்லை அம்மா சொன்ன மாதிரி கதவு இறுகிக் கொண்டதே. அவன பலமாக தள்ளினான். அவ்வளவு தான 'படார்' என ஓசை வீட்டை அதிர்ந்தது தேவன சிதறி விழுந்தான், ராசம் 'தேவா என்ர தேவா, அலறியபடி ஓடி வந்தாள், அவன் ரத்த வெள்ளத்திலே கிடந்தான, தேவன் என்ர ராசா ஒரு தொழில் திறப்பன் என்றாயே தேவா அவள் கதறிய ஓசையில் ஊரே கலங்கியது. ◘

இவ்வார சிறுகதை

## யாரிடமும் சொல்லாதே!

ஒரு நாட்டின் அரசனுடைய மகனும் - மந்திரியுடைய மகனும் மிகுந்த சினேகமாக இருந்தார்கள். எந்த நேரமும் ஊர் சுற்றிக் கொண்டிருப்பதிலும் - அரட்டை அடிப்பதிலும் நேரத்தைப் போக்கி வந்தனர்.

இது அரசனுக்கும் - மந்திரிக்கும் வருத்தத்தைத் தந்தது. இப்படி இவர்கள் ஊர் சுற்றுகிறார்களே என்று தவருந்தினர். இருவரையும் கண்டித்து கேட்கவும் பயமாக இருந்தது. எப்படியாவது அவர்கள் இருவரும் சந்திப்பதை நிறுத்த வேண்டும் என்று அரசர் விரும்பினார்,

இது விஷயமாக அரசர் யோசனையில் ஆழ்ந்திருந்த போது பீர்பல் அங்கே வந்தார்,

நல்ல சமயத்திற்கு வந்தாய் பீர்பல் - என்று அரசர், எனது மகனும் - மந்திரியின் மகனும் நேரம் காலம் இல்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதை எப்படியா

### ஜெயா மாமா

வது தடுக்க வேண்டும். அவர்கள் நட்பு தொடர்ந்தால் நல்லதற்கு இல்லை என்று நான் நினைக்கிறேன், நீ என்ன நினைக்கின்றாய் என்று பீர்பலிடம் அரசர் கேட்டார்.

நீங்கள் நினைப்பது சரி. இப்படியே போனால் இரண்டு பேரும் கெட்டுப் போய்விடுவார்கள் என்றார் பீர்பல்.

அதற்கு ஏதாவது வழி இருக்கின்றதா என்று அரசர் கேட்டார்:

ஏன் இல்லை! நானே அவர்களின் நட்பை பிரிக்கிறேன். நாளைக்கு அரசசபையில் நடக்கப் போவதைப் பாருங்கள் என்றார் பீர்பல்.

மறுநாள் அரசசபை கூடியிருந்தது. சபையில் அனைவரும் அமர்ந்திருந்தார்கள். அரசரின் மகனும் மந்திரியின் மகனும் அருகருகே அமர்ந்திருந்தார்கள். இந்தச் சமயத்தில் பீர்பல் மந்திரியின் மகனை தன்னிடம் வருமாறு சைகை காட்டினார். மந்திரியின் மகனும் எழுந்து வந்து பீர்பலின் அருகே நின்றான். பீர்பல் அவன் காதில் ரகசியமாக ஏதோ சொல்வதைப் பேரல் பாவனை செய்தார். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. பின் மந்திரியின் மகனை போகும்படி சொல்லிவிட்டு அரசரின் மகனை ஒரு அர்த்த புஷ்டியுடன் பீர்பால் பார்த்து மென்மையாக சிரித்தார். பீர்பலின் இந்த நாடகத்தின் அர்த்தம் புரியாமல் மந்திரியின் மகன் குழம்பிப் போனான்.

மந்திரியின் மகன் தன் இருப்பிடத்திற்கு வந்து அமர்ந்ததும் அரசரின் மகன் பீர்பல் உன்னிடம் என்ன சொன்னார் என்று கேட்டான் மந்திரியின் மகன் ஒன்றும் சொல்லவில்லை என்றான்.

என்னைப்பற்றி பீர்பல் ஏதோ உன்னிடம் சொல்லியிருக்கிறார் நீ மறைக்கிறாய் வா வெளியே போய் பேசுவோம் என்று இருவரும் வெளியே வந்தனர்,

சரி இப்ப சொல்லு பீர்பல் என்ன சொன்னார் என்று அரசன் மகன் கேட்டான்.

ஒன்றும் சொல்லவில்லை; என்றான் மந்திரியின் மகன், நீ பொய் பேசுகிறாய்; என்று கோபத்துடன் சொன்ன அரசர் மகன், உன் நட்பும் வேண்டாம் - உறவும் வேண்டாம் என்று போய்விட்டான். அது முதல் அரசரின் மகனும் மந்திரியின் மகனும் பழகுவதை நிறுத்திக்கொண்டு - அரச காரியங்களில் கவனம் செலுத்தினார்கள்.

## பணக்காரனும் ஏழையும்

நதியின் கரையோரம்
நடந்து சென்றனர்
இரு மனிதர்கள்.
தொந்தியும் வண்டியுமாக
ஒருவன்.
மற்றவன், கொட்டாவியால்
காற்றை அசுத்தமாக்கியபடி
அதோ, பார்!
ஆ!நீரின் மேலே வள்ளங்கள்,
ஆ!கரையின் மேலே அல்லிகள்!
பரவசமானான் பணக்காரன்
என பார்வைக்கு
எதுவும் தெரியவில்லையே
பசியில் துவண்டான் ஏழை,

# வைகறைக்கதிர்

## சிறுவர்கள் சிறப்புடன் வாழ்வோம்

அன்பும் பண்பும் அறிவும்
ஆற்றல் மிக்க செயலும்
இனிய நல்ல நட்பும்
ஈசனுடைய நல்லருளும்
உழைப்பில் உயர்வும் கொண்டு
ஊக்கமாக நாங்கள்
எல்லோரும் போற்றுமாறு
ஏற்றம் மிகப் பெற்றே
ஐக்கியமாய் என்றும்
ஒத்துழைத்து வாழ்ந்து
ஓரவஞ்சனைகள் இன்றி
ஔவை நல்லுரை வழியே - வாழ்வோம்.

தி . மயூரகிரி
'பாரதி கழகம்'
நீர்வேலி வடக்கு
நீர்வேலி

## மாமா தந்த குதிரை

எங்கள் வீட்டுக் குதிரையார்
நாங்கள் ஏறும் குதிரையார்
இங்கும் அங்கும் ஆடுவார்
எங்கும் ஓடிப் போய் விடார்.

தவிடு புல்லுப் பிண்ணாக்குத்
தண்ணீர் கூடக் கேட்டிடார்
செவியை பிடிச்சும் இழுக்கினம்
திரும்பி எம்மை பார்த்திடார்.
எங்கள் வீட்டுக் குதிரையார்
நாங்கள் ஓடும் குதிரையார்
ஆசைமாமா அன்புடன்
தந்த மரக் குதிரையார்.

## தகவல் களஞ்சியம்

✳ தற்போது பூமியின் பரப்பளவில் பத்திலொரு பங்கை உறைபனி மூடியிருக்கிறது. இது முற்றாக உருக்கினால் என்ன நிகழும்? அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள 151 அடி உயரமான சுதந்திரத்தேவி சிலையின் அரைவாசிப் பகுதி வரை நீர்மட்டம் உயரும் இலங்கை இருந்த அடையாளமே இல்லாமல் போகும். பயந்துவிடாதீர்கள். இன்னும் பல்லாயிரம் வருடங்களுக்கு இப்பனி உருகப் போவதில்லை.

✳ கல்லுக்குள் ஈரம் இருக்கின்றதோ இல்லையோ, சகாரா பாலை வனத்தின் தென்பகுதியில் ஈரம் இருக்கிறது. 1981 ம் ஆண்டு நவம்பரில் 'கொலம்பியா' விண்கலம் எடுத்த படங்களை வைத்து ஆராய்ந்த போது அப் பகுதியை பசுஞ்சோலையாக மாற்றக் கூடிய நீர் தரைக்கடியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

✳ உணவுப் பொருட்களை அடைக்கும் தகரப் பேணிகளின் உட்பகுதியில் வெள்ளீயம் பூசப்படுகின்றது. இப் பூச்சு சிறிது கீறல் பட்டால் கூட முழுப் பேணியும் துருப் பிடித்து கறள் கட்டி விடும் இதனால் உணவுப் பொருள்கள் சீக்கிரமே பழுதாகிவிடும்.

## இஸ்ரேல்

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் தோற்றுவிக்கப்பட்ட நாடு. சர்வாதிகாரி கிட்லரின் படுகொலை தாக்குதலால் சின்னாபின்னமாக்கப்பட்டு - உலகம் முழுவதும் சிதறி ஒடிய யூத மக்களே இங்கு வாழ்கின்றனர். விஞ்ஞான அறிவில் தலை சிறந்தவர்கள். கிட்லரின் நச்சு வாயுவால் 50 லட்சம் யூத மக்கள் அழித்தொழிக்கப்பட்டதான் சோக வரலாறு இவர்களுக்கு உண்டு.

இஸ்ரேல் நாடு மத்திய கிழக்கில் அமைந்துள்ளது. இந்த நாட்டின் எல்லையில் இருக்கும் முஸ்லிம் நாடுகள் பின் வருமாறு; எகிப்து, ஜோர்டான் - சிரியா - லெபனான் ஆகும். இந்த நாடுகள் சேர்ந்து இஸ்ரேலுக்கு எதிராக இரண்டு முறை பெரும் யுத்தத்தைத் தொடுத்தது. ஆனால், யுத்தத்தில் கெட்டிக்காரர்களான இஸ்ரேல் படையிடம் அவர்கள் தோற்றுப் போனார்கள். இந்த யுத்தம் 1967ம் ஆண்டும், 1972 ம் ஆண்டும் நடைபெற்றது,

இஸ்ரேல் நாட்டை உருவாக்கியதில் ஒரு பெண் மிகப்பெரும் பங்காற்றி இருக்கிறார் அவர் பெயர் கோல்டா மேயர் இஸ்ரேல் நாட்டின் பிரதம மந்திரியாக பல வருடங்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்

தற்போது பிரதம மந்திரியாக இருப்பவரின் பெயர் பென்ஜமின் நெதான்யாஹு.

## சிரித்து வந்தான்

அம்மா எனக்கு முத்தம்
ஆசை போடு தந்தாள்
சும்மா இருந்த தம்பி
சிரித்தபடி வந்து

கன்னத்தில் முத்தம் என்று
காறித் துப்பி விட்டான்
எனக்குக் கோபம் வந்து
எட்டி அடித்து விட்டேன்

தனக்கு சாட்டுக் கிடைத்து
தாளம் போட்டு அழுதான்
தந்தை அங்கு வந்து
தடியால் எனக்கு அடித்தார்

அம்மா அம்மா என்றேன்
அணைத்து முத்தம் தந்தாள்
சும்மா அழுத தம்பி
சிரித்துச் சிரித்து வந்தான்.

— லோ. ஆனந்தவதனி

## வளரும் அரும்புகளுக்கு

காலைக்கதிர் சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான பகுதியாக 'வைகறைக்கதிர்' வெளிவருகிறது. இப்பகுதிக்கான படைப்புக்கள் பாடசாலை மாணவரிடமிருந்தும், சிறுவர்களின் படைப்பாற்றலை வளர்க்க விரும்புவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:
'வைகறைக்கதிர்' மே/பா காலைக்கதிர்.
த பெ. எண் 145, யாழ்ப்பாணம்.

# அதிரடி அரசியலில் சோனியா காந்தி ஆளும் கட்சி அதிர்ச்சி

காங்கிரஸ் கட்சியின் நம்பிக்கை நட்சத்திரமான சோனியாகாந்தி அக்கட்சியை வழி நடாத்திச் செல்வதில் பல சோதனைகளையும், தடைகளையும் தாண்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் என்றே நம்பப்படுகின்றது கட்சியிலுள்ள தலைவர்களின் ஒற்றுமையின்மை — குழறுபடிகள் காலை வாரும் அரசியல் நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் என்னடா அரசியல் என்று களைத்து போயிருக்கிறார்.

சமீபத்தில் நடந்து முடிந்த ராஜ்யசபா தேர்தல்சோனியா காந்தியை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது என்று டெல்லியில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. அசாம், ஆந்திரா இமாசலம் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற ராஜ்யசபைக்கான தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர்கள் அக்கட்சிக் காரர்களால் தோற்கடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடக்கூடிய முக்கிய செய்தியாகும்.

சோனியாகாந்தி கட்சியில் உள்ள சில தப்பான தலைவர்களின் பேச்சை நம்பி தப்பான முடிவுகள் எடுக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கும் உள்ளாகியிருக்கிறார். இதற்கு ராஜ்யசபைத் தேர்தலின் தோல்வியை உதாரணத்திற்கு கொள்ளலாம், (ராஜ்யசபை என்பது டெல்லி மேல்சபை மாநில சட்டசபை அங்கத்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் எம். பிக்கள் இருக்கும் இடம்.)

பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பாக நின்று தோற்றுப் போன தலைவர்களை ராஜ்யசபா தேர்தலில் சோனியாகாந்தி நிறுத்தியதுதான் வெளிப்படையான சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த சலசலப்புக்கு பின்னணியில் இருந்து முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் விஷமம் செய்கிறாரோ என்றும் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

பல வழக்குகளில் சிக்கியிருக்கும் தன்னை காங்கிரஸ் கட்சி ஓரம் கட்டுவதும் அலட்சியப்படுத்துவதும் அவரால் சகிக்க முடியாத சங்கதிகள். தான் பிரதமராக இருந்த போது அடங்கி ஒடுங்கி இருந்தவர்களும் காங்கிரஸ் கட்சியை விட்டுப் போனவர்களும் இன்று சோனியாகாந்தியின் பின்னால் இருந்து தனக்கு எதிராக செயல்படுவதை தடுப்பதற்கும் இப்படிப்பட்ட விஷமங்களை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. எது எப்படியிருந்தாலும் நரசிம்மராவ் விடயத்தில் சோனியாகாந்தியின் பார்வை இப்போது திரும்பாது என்றே நம்பப்படுகின்றது.

தலைமைத் பதவியை ஏற்ற பிறகு காங்கிரஸ் தலைவர்களையும் தொண்டர்களையும் அதிக அளவில் சந்திக்கிறார் சோனியா. அநேகமாக காங்கிரஸ் கட்சியில் இருக்கும் அனைவரும் மற்றவர்களைப் பற்றி புகார்களைக் கொண்டு வந்து குவிக்கிறார்களேயொழிய உருப்படியான திட்டங்கள் ஒன்றையும் கொடுப்பதில்லை என்றும் சொல்லப்படுகின்றது. இதையிட்டு அவர் வருத்தப்பட்டுமிருக்கிறார். கடந்த காலத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர்களாக இருந்தவர்கள் கட்சிக்குள் கோஷ்டிகளை ஏற்படுத்தி அதை மாநிலம் வரை வளரவிட்டிருந்தார்கள்,

அதையே தான் இந்த அம்மாவும் செய்கிறார்கள் என்னும் ஆதங்கம் பரவலாக பேசப்படுகின்றது. சரத்பவாரை எதிர் கட்சித் தலைவராக்கியது - நரசிம்மராவை ஓரம் கட்டியது – காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த கேசரியை அப்பதவியில் இருந்து தூக்கியது பாராளுமன்றத் தேர்தலில் தோற்றுப் போன அர்ஜுன்சிங்கிற்கு கட்சியில் பதவி கொடுத்தது போன்றவற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நேரு குடும்பத்தின் அரசியல் தொடர்பு சோனியா காந்திக்கு இருந்தாலும் கடந்த தேர்தலுடன் நேரடியான அரசியலில் காலடி எடுத்து வைத்திருக்கும் அவர் வீழ்ந்து போயிருந்த காங்கிரஸ் கட்சியை தூக்கி நிறுத்தியிருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் தொடர்ந்து கட்சிக்குதலைமையேற்று வழிநடத்தி செல்வதென்பது சாதாரண விடயமில்லை என்பதை அவர் புரிந்து கொள்வதற்கு இன்னும் சில காலங்கள் தனது அனுபவத்தின் ஊடாக காத்திருக்க வேண்டும்.

இருப்பினும் இன்றைய இந்திய அரசியல் சூழ் நிலையில் வாஜ்பாய் அரசாங்கத்திற்கு மாற்றீடாக அரசியலில் பேசப்படுபவர் சோனியா காந்தி என்று சொன்னால் அது மிகையாகாது. முன்னாள் பிரதமர் வி. பி. சிங் கூட தனது கட்சித் தலைவர்களிடம், சோனியா விடயத்தில் நிதானமாக செயல்படும்படி கேட்டிருக்கிறார் என்றால் அதன் முக்கியத்துவத்தை பார்த்துக் கொள்ளலாம்.

காங்கிரஸ் கட்சியின் தலைமைகடிவாளத்தை இறுகப்பற்றியிருக்கும் சோனியா காந்தி வாஜ்பாய் அரசை எதிர்க்கும் எந்த சந்தர்ப்பத்தையும் நழுவ விடமாட்டார் என்பது அவரின் சமீபத்திய நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றது. ஐக்கிய முன்னணித் தலைவர்களான சந்திரசேகர்-முலாயம்சிங் யாதவ் இருவரையும் சமீபத்தில் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியிருக்கிறார். தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனாரை மீண்டும் கட்சிக்கு வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைக்கு கட்சியை தயார் செய்வதற்காக சம்பந்தப்பட்ட எல்லோரையும் சந்திக்கிறார் என்பது டெல்லியில் இருந்து வரும் செய்திகள்- காங்கிரஸ் கட்சிக் காரர்கள் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற உற்சாகத்தில் தலைகால் புரியாமல் தவிக்கிறார்கள் என்பதும் மற்றொரு செய்தி.

ஜெயலலிதாவின் கெடுபிடிகளால் தடுமாறிப் போயிருக்கும் பிரதமர் வாஜ்பாய் தன்னை சுதாகரித்துக் கொண்டு மீண்டே ஆக வேண்டும். ஏனென்றால் சோனியா காந்தியின் அரசியல் காய் நகர்த்தல் – (பாரதீய ஜனதா கட்சிக்கு எதிரான அரசியல் கட்சிகளை தன்வசம் ஈர்த்தல்) அதில் வெற்றி காணுதல் வாஜ்பாய் அரசுக்கு ஆபத்தாகவே முடியும்,

பிரமச்சாரி வாஜ்பாய்க்கு இப்படி ஒரு சோதனை வந்திருக்கக் கூடாது. அதுவும் இரண்டு பெண்களால். ஒருபக்கம் நாகம் மறுபக்கம் வேடன் இரண்டுக்கும் நடுவில் ஓர் அழகிய கலைமான் என்ற பாட்டுத்தான் நினைவுக்கு வருகின்றது.

---

குடும்பப் பொறுப்பு காரணமாக

# இழப்புக்களை பொறுமையுடன் சமாளிக்கும் பெண்கள்

குமுதினி சாமுவேல் எழுதிய
யுத்தமும் பிழைப்பும்
கட்டுரையின்
சென்ற வாரத் தொடர்ச்சி

சேவைகளை வழங்குவது சம்பந்தமான பிரச்சினைகள் கூட சுகாதாரப் பராமரிப்பை பெற்றுக் கொள்வதைச் சிக்கலாக்குகிறது. சௌகரியமற்ற மருத்துவ சேவை நேரங்கள், வீட்டுப் பொறுப்புக்களை முடிப்பதில் பெண்கள் அதிக நேரம் செலவழித்தல், மருத்துவச் சேவை நிலையத்தின் அதிக தொலைவு, பாதுகாப்பற்ற பிரயாணம என்பவற்றுடன் பெண்கள் தம் அன்றாட அலுவல்களைக் கவனிக்க முடியாத அளவுக்கு நோய் அதிகரிக்கும் வரை மருத்துவரிடம் செல்லாமையுமே பொதுவான பிரச்சினைகளாகும்.

இவர்களுள் சில பெண்கள் மனோ நிலை, உணர்வு நிலை பாதிக்கப் பட்ட நிலையில் உள்ளனர் கணவனுடைய எதிர் பாராத அல்லது அதிர்ச்சியூட்டக் கூடிய இழப்பானது தீவிரமான மனோ நிலை மற்றும் உணர்வு நிலை அதிர்ச்சிக்குட் காரணமாகிறது. பல பெண்கள் குடும்ப பொறுப்புகள் காரணமாக இவ்வாறான இழப்புகளை பொறுமையுடன் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

சில வேளைகளில் இவ்வாறான இழப்புக்களின் அதிர்ச்சியைத் தனியாகவே அனுபவிக்க வேண்டியுள்ளது. தம் சகாக்களின் இறப்பின் அல்லது காணாமல் போதலின் பின்னரும் சில பெண்கள் இடம் பெயர்ந்தவர்களாகித் தமக்கு அந்நியமான சூழல்களை எதிர் கொள்கின்றனர் குடும்பத்தினதும் சமுகத்தினதும் ஆதரவை இழக்கும் போதும், அதிர்ச்சிக்குள்ளான ஏனைய குடும்ப அங்கத்தவர்களுடன் பழகும் போதும் உணர்வு ரீதியான சிக்கல்கள் தோன்றுகின்றன. பல பெண்கள் அச்ச மூட்டும் இராணுவ நடவடிக்கைகளையும். இவ்வாறான பழைய சம்பவங்கள் மீண்டு வீடுமோ என்ற அச்சத்தையும் அனுபவிப்பவர்களாக உள்ளனர். இதனால் ஏற்படுகின்ற மன அழுத்தம். தீவிர அதிர்ச்சி என்பன உணவு முறை, தூக்கம் என்பவற்றில் ஒழுங்கீனத்தையும் பதற்றத்தையும் விளைவிக்கிறது. இவ்வகை மன அழுத்தங்கள் தீவிர சிரக்குகளும், குழப்பகரமான நடத்தைகளும், தம்மைத் தாமே துன்புறுத்துகின்ற நிலைமைகளும் ஒருவரை இட்டுச் செல்வதோடு உளத் தாக்கத்தால் பாதிக்கப்படக் கூடிய நோய்களையும் உருவாக்குகிறது.

வீடமைப்புக்கூட ஒரு அவசிய தேவையாகும். இடம் பெயர்ந்தவர்களுக்கும், மீள குடியமர்த்தப் பட்டவர்களுக்கும் அமைக்கப்படும் வீடுகள் சிறிய ஓலைக்குடிசைகளாக உள்ளன இவற்றை அடிக்கடி திருத்தவும் வேயவும் வேண்டியுள்ளது. அரசும் சில அரசசார்பற்ற நிறுவனங்களும் அடிப்படை நிர்மாணத்துக்குரிய மூலப்பொருட்களை வழங்குவதுடன தேவையானபோது மீளமைப்புச் செய்வதற்குரிய மரம், ஓலை என்பவற்றையும் வழங்குகின்றன. அதிகமாக இவ்வீடுகள் தற்காலிகமானவையே, மீளக் குடியமர்த்தப்பட்டோர் வீடமைத்தில் இவ்வீடுகள் மீளமைக்கப்பட வேண்டியது மிக அவசியம்.

அரசினது ஒருங்கிணைக்கப் பட்ட உதவித்திட்டத்தினால் சில மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு வீடமைப்பு மானியமாக ரூபா 25000 வழங்கப் பட்டது. எவ்வாறாயினும் இம் மானியம் போதுமானதாக இல்லை. இவ்வீடுகள் போதிய சுகாதார, சமையல் சுத்தப்படுத்தும் வசதிகளின்றி முழுமையற்றவையாயும் பெண்களின் வேலைப்பளுவை மேலும் அதிகரிப்பனவாயும் உள்ளன.

பல பெண்கள் சமுகம் தம் மீது கொண்ட எதிர் மறை அணுகுமுறை பற்றி அங்கலாய்த்துக் கொண்டனர். பெண்கள் 'விதவைகள்' என தனித்து ஒதுக்கப்படாத போதும் அமங்கலமானவர்களாகவும் விழாக்களிலும். கொண்டாட்டங்களிலும் விரும்பப்படாதவர்களாகவும் தாம் கருதப்படுவதாகத் தெரிவித்தனர் சுதந்திரப் போக்குடையவர்களாகவும் ஆடை அணிதலில் குறிப்பிட்ட விதி முறைகளை மீறுபவர்களாகவும் இருந்தால் விமர்சிக்கப்பட்டனர். உதாரணமாக வர்ண சேலை அல்லது நகைகள் அணிதல் விமர்சிக்கப்பட்டது. அத்துடன் அவர்களது கணவர்களது இறப்பிற்குக் காரணமானவர்களாகவும் குற்றம் சாட்டப்பட்டு அதிர்ஷ்டமற்றவர்கள் என உறவினர்களால் ஒதுக்கப்பட்டனர். அவர்களுடைய தனிப்பட்ட பாதுகாப்பின் தேவையை அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் போர் மீண்டும் தங்களை இடம் பெயர்த்துவிடுமோ என்று அதிகமான பெண்கள் அஞ்சுகிறார்கள். அவர்களது பிள்ளைகள் கைது செய்யப்பட்டு விடுவார்கள் அல்லது காணாமல் போய் விடுவார்கள் என்பதும் அவர்களது பயமாக உள்ளது. திடீர் சுற்றி வளைப்பு அடையாளம் காணப்படாத அதிகாரிகளால் மறியலில் வைக்கப்படுதல், பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுதலில் பயம், திடீர் சோதனை, நேரானுமதியற்ற சூழல்கள், ஊர் காவல் படையினர் பற்றிய பயம், தனியே பிரயாணம் செய்வதிலும் இரவில் வெளியில் திரிவதிலும் பயம் போன்ற விடயங்களை அப்பெண்கள் கவலையுடன் சுட்டிக்காட்டினர்,

மற்றுமொரு பிரச்சினை என்னவெனில் ஆண்துணையை இழந்த பெண்களாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சனீஸ்வர மாற்றப் பலாபலன்கள்

18-04-1998 தொடக்கம் 2½ ஆண்டுகளுக்கு
(சென்ற இதழ் தொடர்ச்சி)

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1

சனீஸ்வரன் தனு ராசியினருக்கு கோசாரீதியில் 5ம் இடத்திற்கு 18-4-98 வருகை தந்து 2½ ஆண்டுகளுக்கு பலா பலன்களைப் புரிய முற்படும் போது ஐந்தில் சனி நெஞ்சிலே சளியுள்ளவர் படுகின்ற அவஸ்தைக் கொப்பான நிலைமைகளையும் சங்கடங்களையும் அளிப்பாரெனலாம். நல்ல காலம் தனு சனீஸ்வரனுக்கு நட்பு வீடாக இருப்பதினால் சனீஸ்வரனால் ஏற்படும் கஷ்டங்கள் தலைக்கு வருகின்ற பேராபத்து தலைப்பாகையுடன் போய்விடும். சளியுடன் தொடர்பான நோய்களில் கவனமெடுக்கவும். மாமன்மாரின் உறவில் மனஸ்தாபமும் விரோதமும் தோன்றலாம். சுபகாரியங்களுக்கு வீண் செலவுகள் ஏற்படும், கடன் பட்டு கொடுக்க முடியாது திண்டாட நேரிடும். ஒருதலைக்காதலால் அவமானமும். அரச தண்டனையும் குடும்பப் பிரிவும் தோன்றலாம். வியாபாரிகள், அரச ஊழியர்கள் தத்தமது தொழிலில் போதிய சிரத்தை காட்டாவிடின் பின்னர் வருந்த வேண்டி நேரிடும்.

## மகரம்

உத்தராடம் 2,3,4.
திருவோணம்
அவிட்டம் 1, 2

கோசரத்தில் சந்திரன் நின்ற விட்டுக்கு 4ம் இடத்தில் சனீஸ்வரன் வருங்காலத்தை 'அர்த்தாஷ்டமச் சனி' என்பர். மகர ராசி சனியின் ஆட்சி வீடாக இருப்பதினால் வருந்துன்ப துயரங்கள் 'காகவாகனன் காலடி வீழ்ந்தால் மறைந்து போகும்.' சனீஸ்வரனின் 4ம் இடக்கோசர நிலையினால் ஏற்படப் போகும் பலாபலன்களைக் கண்டும் அனுபவித்தும் வருகின்ற மகரராசிக் காரர்கள் சனீஸ்வரனின் ஆட்சி வீடாக உங்கள் இராசி இல்லம் இருப்பதினால் மலை போல் வருஞ் சோதனைகள் பனிபோல் நீங்கி விடும். பெற்ற தாயாரை பிரிய அல்லது இழக்க, நோயினால் தேக நலங்கெட இது வரை அனுபவித்து வந்த வசந்த கால வாழ்க்கை வசதிகளில் இடைஞ்சல்கள் தோன்ற, புத்துப்புத்திர யோகமும்; பூர்வீக சொத்திற்கு வில்லங்கமும்; நட்டத்திற்கு மனை, பொருட்களை விற்க வேண்டிய நிலையேற்படவும்; வெளியூர் பயணம் இடையில் காலை வாரிவிட நம்பினோர் நட்டாற்றில் கைவிடவும், திருடர், எதிரியினால், நண்பர்களால், பிள்ளைகளினால் பொருளிழப்பும். இரத்தக் காயங்களும் ஏற்படலாம்.

## கும்பம்

(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1 2, 3)

கும்பராசிக்காரர்ளே இனி வரும் 2½ ஆண்டுகளுக்கு கொடுத்து வைத்தவர்கள்; ஏனெனில் 18.4.98 உடன் கடந்த 7½ ஆண்டுகள் உங்களைப் பிடித்தாட்டி பல்வேறு கஷ்டங்களையும்; விரக்தியையும் கொடுத்து வந்த ஏழரைச் சனி நீங்குகின்றமையேயாகும். கும்பராசிக்கு சனீஸ்வரன் ஆட்சி வீடாக இருப்பதால் கொடுக்கின்ற சனீஸ்வரன் இனி கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கப் போகின்றார். தடைப்பட்டிருந்த வெளியூர் பயணம், திருமணம் மற்றும் சுபநிசழ்வுகள் இனித் தாமதிக்காது தங்கு தடையின்றி உங்கள் மனம் போல, நடைபெறும். வர்த்தக நிலையங்களைத் திறக்க, மனை கோல, பூமி கொள்ள, வாகன போகங் கிட்ட. மக்களால் மனமகிழ, மாறாத நோய் நொடிகள் மாறி தேகம் இளமை கொள்ள, மூத்த சகோதரர், மாமன்மார், கன்னியர்கள், நண்பர்கள் உதவி கிட்ட, எதிரியின் தொல்லைகள் நீங்க, வழக்குகளின் முடிவுகள் சாதகமான முடிவைத் தர; பிரிந்தவர் மீண்டும் வரவும் பலனுண்டு.

## மீனம்

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

மீனராசி அன்பர்களே உங்களுக்கு 7½ச் சனி கடைக் கூறு ஆரம்பிக்கின்றது. கடந்த 5 ஆண்டுகள் பட்ட கஷ்டங்கள் இனி மெல்ல மெல்ல நாளாந்தம் மறைந்து கொண்டே போகும். மீனம் சனியின் நட்பு வீடாக இருப்பதினால் 7½ச் சனியின் கடைக் கூறு நடக்குங் காலத்தில் உங்களுக்கு ஓடி வரும் துன்பங்கள் கண்ணுக்கு வந்தது கண்புருவத்துடன் போய்விடும். உங்கள் இராசிக்கு சனீஸ்வரன் இரண்டாம் நிலையில் கோசர நிலையில் நின்று இடைக்கிடையே 7½ச் சனியின் தன்மைக்கேற்ப உள்ளத்தை ஊடுருவும் சோக கீதங்களை ஒலிக்கச் செய்யும். உங்கள் ஜாதகத்தில் மகாதெசா புத்தி நன்றாகவும் மற்றும் சனீஸ்வரன் நல்ல ஸ்தானத்தில் நின்றால் 7½யின் கஷ்டங்கள் குறைந்து விடும். சனீஸ்வர விரதம், சனிக்கிழமைகளில் எள் எண்ணெய் எரிப்பது, சனிப்பிரதோஷ விரதம் பிடிப்பது, வியாழக்கிழமைகளில் தெட்சணா மூர்த்திக்கு அர்ச்சனை, வழிபாடு செய்து வரவும்.

சோதிடர்
V. A. சிவராசா
வேலணை

---

## யாழ் நகரில்

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியான வயதுடையர்கள அநேகமாக பாடசாலை செல்வோராகவும் உயர் வகுப்பு அல்லது தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பலவேறு வகைப்பட்ட கல்வியை தொடர்வோராகவும் காணப்படுகின்றனர்.

இவ்வாறானவர்கள் வகுப்பு நேரங்களில் திரையரங்குகளுக்கு செல்வதும் தேவையற்றரீதியில் வீதியில் திரிவதும் சிலவேளைகளில் காணாமல் போவோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய பரிதாப நிலைக்கு உள்ளாக வேண்டிய சம்பவங்கள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகின்றது.

அது மட்டுமல்ல எத்தகைய படங்கள் காண்பிக்கப்படுகின்றன என்பதும், அது பார்ப்பவர் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த வல்லன என்பதும் நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

தற்பொழுது திரைஅரங்குகளில் காண்பிக்கப்படும் படங்கள் காதலை மையமாகக் கொண்ட அதே வேளையில் படுக்கை அறைக் காட்சிகளை அப்பட்டமாக சித்திரிக்கும் படங்கள் பெருமளவு இடம் பொறுவதும் அவற்றைப் பார்ப்பதற்காக இள வயசுகள் திரையரங்குகளுக்கு படை எடுப்பதும் சமுதாய ஆரோக்கியத்திற்கு வழி சமைக்கும் எனக் கருத முடியாது

இத்தகை ஒரு பரிதாப நிலைக்கு திரைப்படங்களின் வழிகாட்டுதல்களும் சமூகச் சீரழிவுகளுக்கு ஒரு வலுவான காரணி என்பதனை மறுப்பதற்கில்லை,

---

## நெருக்கடிகள்

4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூற வேண்டும், காரணம் வேலைப்பளுவால் உண்டான களைப்போ?

கதாநாயகி பாத்திரம் ஏற்ற செல்வி தாட்சாயினி ஸ்ரீபாலச்சந்திரன் பாத்திரத்துக் கேற்ற கம்பீரமான தோற்றத்தைப் பெற்றிராத குறையினைத் தமது ஆட்டம், அபிநயம், இனிமையான பாட்டு என்பவற்றால் போக்கி விட்டார். நாட்டுக் கூத்திசையும், கர்நாடக இசையும் மிக அழகாக அவரின் பாட்டுக்களிலே சங்கமித்து இரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன, மற்றைய பிரதான பாத்திரங்களினதும் (அரசி, வேலைப்பணிக்கன்) உப பாத்திரங்களிலும் அப்பழுக்கற்ற ஆட்டத் திறமும், பின்னணியினரின் ஒத்தாசையோடு பாடப்பட்ட பாட்டுத்திறனும் திருப்தி தருமளவுக்கு அமைந்திருந்தன. இதனால் எந்த இடத்திலும் தொய்வு ஏற்படாமை சிறப்பித்துக் கூற வேண்டுவதாகும்.

இரசிகர் ஒருவர் 'இந்தக் கூத்திலே முதன்மைப் பாத்திரமாக எனது உள்ளத்தைக் கவர்ந்தது யானை தான்' என்றது இவ்வேளையில் நினைவில் வருகின்றது. யானையின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

---

## வாக்குகளை

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு சென்றிருந்தேன். அப்பயணம் எனக்கு இரட்டிப்பு நேரத்தை எடுத்தது. ஏனெனில் இது எனது சொந்த முயற்சியில் மேற்கொள்ளப்பட்டது.

☐ வடக்கு கிழக்கில் நிகழ்ந்து கொண்டிருக்கும் போர் பற்றி —

எனக்கு வன்முறையில் ஆர்வமே இல்லை. வன்முறையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் பிரச்சினையை தீர்ப்பதற்கு வன்முறையை நிறுத்த வேண்டும். பிரச்சினையைப் பற்றி பேசவேண்டும்.

☐ உங்களுடைய பார்வையில் பிரச்சினைக்கு தீர்வு என்ன?

எனது தீர்வு அன்பு கொள்ளலும் சேவை செய்தலும் தான். மானுடப் பண்பை உலகம் பூராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனக்கு அரசியல் தீர்வில் நம்பிக்கையில்லை. கடந்த 30 வருடங்களாக அரசியல் தீர்வு பற்றி கதைத்து ஒரு பிரயோசனமும் இல்லை மனிட வர்க்கம், குடும்பம், கிராமம், சமூகம் யாவும் கிராமசேவையை நோக்கி மாற வேண்டும். சுதந்திர கிராமத்தவர்கள் ஒன்றிணைந்து தேசியத்துக்காக வேலை செய்ய வேண்டும்.

☐ போரினால் துன்பப்படும் மக்களுக்கு உங்களால் உடனடியாக உதவ முடியுமா?

திட்டங்களை கொடுப்பதற்கு அரசியல் அதிகாரம் தேவை. என்னிடம் அரசியல் அதிகாரம் இல்லை, நான் உங்களைப் போன்றவன். நீங்கள் கூட பத்திரிகையாளராக இருக்கிறீர்கள். என்னைத் திட்டலாம். ஆனால் நான் மிகவும் சாதாரணமானவன். ஆனால் என்னிடம் பெரிய இதயம் உண்டு. அதுதான் நான் இங்கு வந்தேன். எனது மனைவியும் வந்தார்.

☐ உங்களிடம் அரசியல் அதிகாரம் இல்லாவிட்டாலும் அரசியலில் தாக்கம் (Influence) உண்டு பண்ண முடியும் தானே ...

அமைச்சரவையில் எனது மாணவர்கள் மூவர் இருக்கிறார்கள். அவர்கள் எனது வேண்டுகோளை செவிமடுப்பதில்லை. அவர்கள் சர்வோதய தத்துவங்களை பின்பற்றுவதில்லை. எனவே என்னால் என்ன செய்ய முடியும்?

☐ உங்களுடைய திட்டங்களின் பொருளாதாரத் தாக்கம் பற்றி ... —

தென்பகுதி திட்டங்களுக்குக் கூட எங்களிடம் நிதி இல்லை; பணம் எங்களுக்கு தாருங்கள். ஆனால் மக்கள் ஒவ்வொருத்தரும் சகோதர சகோதரிகளாக வாழ்வார்களாயின் அவர்களால் ஒன்றாகவும் அமைதியாகவும் வாழ முடியும், எனவே இந்த அடிப்படையில் நாம் ஒன்றிணைந்து சிரமதானம் மூலம் தெருக்களையும் கிணறுகளையும் மற்றும் சிற வேலைகளை நாம் செய்யமுடியும். இவற்றை நாம் செய்யும் போது ஏனையவர்கள் எமக்கு உதவி செய்வார்கள். அரசாங்கமும் கூட உதவி செய்யும்.

☐ தற்போதய யாழ்ப்பாண நிலைமை பற்றி ......

பல சந்திப்புகளில் சுமார் 3000 மக்களை சந்தித்துள்ளேன்; நான் மிகவும் கவலையடைகிறேன். ஏனெனில் இந்த மக்கள் உடனடி உதவிகள் வேண்டி நிற்கிறார்கள். இதற்கு மக்கள் தாமாக ஒன்று சேர்ந்து தமக்குரிய சூழ் நிலைமைகளை வேறு எவரினதும் உதவிகளை எதிர்பாராமல் உருவாக்க வேண்டும். எனவே அங்கு மக்கள் ஈடுபாடு வேண்டும் அரசின் ஈடுபாடும் வேண்டும். அப்போது தான் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் வளங்கள் எமது மக்களை வந்தடையும்.

☐ ஸ்ரீலங்காவின் மனித உரிமைக் குழுவின் ஒரு அங்கத்தவர் என்ற வகையில் வடக்கில் காணாமற் போனவர்கள் பற்றி ... —

காணாமற் போனவர்களின் உறவினர்கள் சுமார் 100 பேர் வரையில் நாவலர் கலாசார மண்டபத்தில் சந்தித்தேன். அவர்களுக்கு' ஜனாதிபதி விசாரணைக் கமிஷன் ஒன்று அமைத்து தருவதாக சில காலத்திற்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்தார். இன்று 4 மாதங்கள் கடந்து விட்டன. இந்தக் கமிஷன் அமைப்பது பற்றி ஜனாதிபதிக்கு மீண்டும் வலியுறுத்தும் படி கேட்டிருந்தார்கள். நான் அதற்கு ஒப்புக் கொண்டுள்ளேன்.

☐ ஆகவே நீங்கள் அரசிற்கு அழுத்தம் கொடுக்கப் போகிறீர்கள் — ...

இல்லை. நான் அழுத்தம் கொடுக்கப் போவதில்லை. அரசிற்கு அழுத்தம் கொடுப்பதற்கு நான் யார்? நான் ஒரு சாதாரணமானவன். ஒரே ஒரு வாக்களிக்கும் அதிகாரம் மட்டும் தான் என்னிடம் உண்டு; அதனையும் கூட நான் பயன்படுத்துவதில்லை. எனக்கு இந்த வாக்குகள் எண்ணும் ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை.

☐ அவ்வாறாயின் உங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லையா?

ஜனநாயகம் மிகவும் Hypocritical ஆன ஓர் அரசியல் தத்துவம். உலகில் எங்கே உண்மையான ஜனநாயகம் உள்ளது, எங்கே மக்கள் பங்கு கொள்கின்ற ஜனநாயகம் உள்ளது. நான் மேற்கத்திய ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை நான் ஒரு காந்தியன். காந்தி, காங்கிரசை கலைத்துவிட்டு லோக் சபா சங்கத்தை கிராமம் தோறும் அமைக்கும் படி கேட்டார்.

☐ இலங்கையின் ஜனநாயகம் பற்றி —

இங்கு உண்மையான ஜனநாயகம் இல்லை கட்சி வாதம் தான் உண்டு. அதிகாரத்துவம் உண்டு; ஏழைமக்கள் போட்டியிட முடியாத முதலாளித்துவ வகை திறந்த சந்தைகள் தான் உண்டு. மேல் மட்ட மக்கள் தெரிவு செய்யும் தேர்தல் தான் உண்டு. ஜனநாயகம் அடிமட்ட மக்களிடம் இருந்து எழ வேண்டும். அது ஆத்மார்த்தமாக சமூக ரீதியாக அரசியல் பொருளாதார கலாசார ரீதியாகவும் எழ வேண்டும்.

☐ யாழ்ப்பாணத்தில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்குவதற்கு அரசினால் இடப்பட்ட தடைகள் பற்றி ......

மக்கள் இயக்கம் அதன் சட்டதிட்டங்களுக்குள்ளே எங்கும் இயங்கலாம். யாரும் அதனை தடை செய்ய முடியாது. ▣

# காலைக்கதிர்

தபாற்பெட்டி எண் : 145, யாழ்ப்பாணம்.

ஒளி : 01 01 - 05 - 1998 கதிர்: 09


## நியாயமற்ற கொந்தளிப்பு

புதுடில்லியில் புதிய அரசாங்கத்தின் பதவி யேற்பு; பாகிஸ்தானில் அணு ஆயுத பரிசோதனை; சீனாவின் படைக்குவிப்பு என்பன போன்ற செய்திகள் தென்னாசியாவின் வலுச்சமநிலையில் பதற்றம் தோன்றியிருப்பதை கோடி காட்டுகின்றன எனலாம்.

இதன் விளைவாகவோ என்னவோ கொழும்புக்கு ஒரு வகையான இராஜதந்திர முக்கியத்துவம் கிட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவிற்கான நிரந்தரப்பிரதிநிதி பில்றிச்சட்சன், அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதியமைச்சர் கார்ள் இண்டர்பேர்த் பொதுநலவாய அரசுகள் அமைப்பின் செயலாளர் எமேகா அனியோகு இந்திய அரசின் வெளியுறவு கொள்கை வகுப்புக்குழுவின் தலைவர் நாகேந்திர நாத் ஜா என இராஜதந்திரிகள் பலரும் திடீர் திக்விஜயங்களை மேற்கொள்ளும் மையமாக கொழும்பு கடந்த சில வாரங்களாக மாறியுள்ளது.

இந்த இராஜதந்திர விஜயங்களின் உள் நோக்கம் மற்றும் மூடிய கதவுகளுக்குப் பின்னால் பேசப்பட்ட அந்தரங்க விடயங்கள் குறித்து தெளிவான தகவல்கள் வெளியிடப்பட்டதாக தெரியவில்லை எனினும் இந்த இராஜதந்திரிகள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் இனப்பிரச்சினை குறித்தும் நடந்து வரும் யுத்தம் பற்றியும் தத்தம் அபிப்பிராயங்களை வெளிப்படுத்த தவறவில்லை.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட்டு அரசியல் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கப் பிரதிநிதி உரத்த குரலில் முழங்கிய போது மகிழ்ச்சி ஆரவாரம் செய்தவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிரந்தர இணைப்புத் தான் இனப்பிரச்சினை தீர்வின் தொடக்கப் புள்ளி என்று இந்தியப் பிரதிநிதி வாய் திறக்கும் முன்பே உள்நாட்டுப் பிரச்சினையில் அன்னியத் தலையீடு என கோபம் கொப்புளிக்கப் பேசும் நிலை பொருத்தமானதாக தென்படவில்லை.

கடந்த காலங்களின் கசப்பான அனுபவங்களும், தொடர்ந்து கொண்டிருக்கும் சந்தேகப் பார்வைகளும் நீடித்துக் கொண்டு வரும் மோதல்களும் இனப்பிரச்சினை ஒரு உள்நாட்டு விவகாரமல்ல என்றே உணர்த்துகிறது எனலாம். அத்துடன் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு வெளி நாடுகளிடம் கையேந்தும் நிலையும், போரில் பயன்படுத்தப் படும் ஆயுத வகைகளின் கொள்வனவுகளும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் பயிற்சி வசதிகளும், இனப்பிரச்சினை உள்நாட்டு எல்லைகளைக் கடந்து உலக அரங்கிற்கு வியாபித்து நிற்கிறது என்பதையே எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம்.

எனவே தான் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு ஒவ்வொரு சக்தியும் பரந்த பொதுநல அடிப்படையில் செயற்பட வேண்டியது தேவையாகிறது. குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் நலன்களை பிரதிபலித்து தமிழ் மக்களை வழி நடத்தும் சக்திகள் உலக அரங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஏற்ப தம்மைப்பக்குவப் படுத்திக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகிறது. அனைத்து தரப்பினரதும் அனுசரணையான ஆதரவைப் பெற்று ஒத்த கருத்துக்களுடன் ஒருமித்து குரல் எழுப்பினால் தமிழ் மக்களின் அரசியல் இலக்குகள் இலகுவில் எட்டப்படக் கூடியதாக இருக்கலாம்.

# அடிப்படைப் பிரச்சினை தீர்வுகளுக்காக ஒன்றுபடுக!

### மே தினத்தில் அறைகூவல்

பாரிய அளவில் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் எதுவுமில்லாமல் தமிழ்மக்களும், தமிழ் கட்சிகளும் யாழ் நகரில் மேதினத்தை அமைதியான முறையில் கொண்டாடியுள்ளார்கள். சிக்காக்கோ நகரில் எட்டு மணித்தியால வேலைக்காக போராடி வெற்றி பெற்ற தினம் தான் மே தினம். அன்று முதல் தொழிலாளர்கள் தமது உரிமைகளை பாதுகாக்க உலகம் பூராக தமது எழுச்சியை வெளிப்படுத்தினர் முதலாளி வர்க்கத்திற்கு தமது ஒற்றுமைப் பலத்தையும், எதிர்ப்பையும் காட்டிவந்தனர். உலகப்படத்திலிருந்து சோவியத் யூனியன் மறைந்த பின்னர் உலக அரங்கில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாற்றங்களின் பின்னர் முதலாளி தொழிலாளி வர்க்க முரண்பாடு முதன்மைப்படுத்தப்படுவது வெகுவாக மறைந்து விட்டது. மறுதலையாக தேசிய இனங்களின் பிரச்சினைகள் உலகம் பூராகவும் கூர்மையடைந்துள்ளன இலங்கையின் அரசியல் வரலாறும் இந்நிலைமையில் இருந்து தப்பித்து விடவில்லை.

தமிழ் - சிங்கள பாட்டாளிகளை ஆளும் முதலாளித்துவ அரசின் அடக்கு முறைகளிலிருந்து விடுவிக்க இடதுசாரிகள் இலங்கையில் தோற்றம் பெற்றனர். ஆனால் சிங்கள பேரினவாத அரசுகளின் தமிழ் சிறுபான்மையினர் மீதான ஒடுக்கு முறை காரணமாக தமிழ், சிங்கள பாட்டாளிகளை இணைத்து அரசிற்கு எதிரான போராட்டம் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாயிற்று. எனினும் இலங்கையில் மேதினம் இடதுசாரிக்கட்சி ஆட்சிக்கு வரும் அரசகட்சிகள் தவிர ஒடுக்குமுறைக்குள்ளாகி வரும் சிறுபான்மையினராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழர் தரப்பில் கடந்த காலங்களில் கொண்டாடப்பட்டு வந்த மே தினக் கொண்டாட்டங்கள் கூட பாரிய அரசியல் செய்திகளை தாங்கி வந்தனவா என்பது இன்று கேள்வியாகிவிட்டது. ஒவ்வொரு இயக்கங்களும் (விடுதலை இயக்கங்களும் உள்ளகாலப் பகுதியில்) மக்கள் தெருவிற்கு கொண்டு வருதல் எனும் மிகக் குறைந்த பட்ச எதிர்பார்ப்புடன் இயங்கின எனலாம்.

அரசப்படையினர் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் அன்றாடப் பிரச்சினைகள் பலபுதியனவாகிவிட்டன. போரினால் களைப்படைந்து சலிப்புற்ற மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்க சலிப்புறுகிறார்கள் அஞ்சுகிறார்கள். இருபகுதியும் யுத்தம் செய்வதினால் நாம் அச்சத்துடன் தான் வாழ்கிறோம். நாம் நிம்மதியாக வாழ முடியாதுள்ளது, தொழிலாளிகளின் பிரச்சினையை யார் தீர்த்து வைக்க இருக்கிறார்கள். எங்களுக்கு சுதந்தரமான தீர்வு வந்த பின்புதான் எங்கள தொழிலாளிகள் பிரச்சினை தீரும் என்கிறார் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட கூலி வேலை செய்யும் 53 வயதுடைய கந்தசாமி என்பவர். அன்றாடப் பிரச்சினைகள் யாவும் கௌரவமான நீதியான நீடித்த அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் தீர்க்கப்படும் என்பதனை இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் அடிமட்ட மக்கள் உணரத்தொடங்கி விட்டார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு முயற்சி அரசினால் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் அபிலாசைகளை ஐக்கியப்பட்டகுரலில்ஒலிப்பதற்குஐக்கியப்பட்ட

### நிர்ராசன்

தலைமை இல்லை என்பதே உண்மை. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் புளொட், ஈ. பி ஆர். எல். எப் உம் மட்டக்களப்பில் புளொட், ஈ. பி. ஆர். எல். எப், ஈ. பி. டி. பி, ஆகியன இணைந்தும் ஐக்கிய மேதினத்தை கொண்டாடியுள்ளன. இதனூடாக தமிழ் மக்களின் நியாயமான கௌரவமான அரசியல் தீர்வை உருவாக்குவதற்குரிய முயற்சியின் ஒருபடி என அரசியல் கட்சி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு காரணமான அவசரகாலச் சட்டத்திற்கு முண்டு கொடுக்கும் தமிழ் கட்சிகள் எப்படி நியாயமான தீர்வு ஒன்றை மக்களுக்கு கொடுக்கப் போகின்றன என மக்கள் தரப்பில் பேசப்படுகின்றது. இது அவர்களுடைய ஐக்கியப்பட்ட தலைமை குறித்து நம்பிக்கையீனத்தை மேலெழச் செய்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் ஆனந்த சங்கரி மிகக் குறைவானோர் கலந்து கொண்ட அக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் தமிழ் கட்சிகளுடன் நாம் ஒன்றுபட முடியாது. நாம் ஆயுதம் ஏந்தியவர்கள் அல்ல. சண்டித்தனம் செய்தவர்கள் அல்ல என மக்கள் மத்தியில் பேசியுள்ளார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவர் மாணிக்கதாஸன் குருநகர் கலையரங்கில் தனது மேதின உரையில்; தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு அமெரிக்காவும் இந்தியாவும் மாறி மாறி தடைக்கற்களாக விளங்கி வருகின்றன. இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவது மக்களின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்றார். அதே மேடையில் ஈ.பி.ஆர் எல் எப் அமைப்பின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் சுபத்திரன் தனது உரையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தவறு விடாதவர்கள் இல்லை எனும் அளவிற்கு எல்லோரும் ஏதோ ஒரு வகையில் தவறு விட்டுள்ளனர். எனவே கடந்த காலத் தவறுகளை சுட்டிக் காட்டி மாறிமாறி சேறு பூசுவதை விட எதிர்கால நலன் கருதி அனைவரும் ஒன்றுபட வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாக உள்ளது அத்துடன் ஜனநாயகரீதியில் அசையும்படும் அரசியல் சக்திகளின் இருப்பை அங்கீகரித்து விடுதலைப் புலிகளும் ஐக்கியம் காண முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும், எல்லா அரசியற் கட்சிகளும் ஒன்றுபட வேண்டிய ஒன்றுபட்டு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க அரசிடம் அழுத்தம் கொடுக்க வேண்டும் ஆனால் தமிழ் கட்சிகள் ஒன்றுபட முடியாது என்பதை இன்றைய மேதினக் கூட்டங்கள் காட்டுகின்றது. ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு கூட்டங்கள் என்றா மேறுவக கூட்டத்தில் கலந்து கொண்ட 56 வயதுடைய ஒருவர்,

எனவே, தமிழ் மக்களின் அரசியற் பிரச்சினைக்கு நீடித்த நியாயமான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு சகல தமிழ் மக்களும் ஒன்று பட்டு வருவதற்கு வருவதுடன் விரைவான அரசியற் தீர்வை காண அரசிற்கு நெருக்குதலை கொடுப்பதும் அவசியமானதாகும். இந்த மேதினம் அமைதியாக விட வேண்டும் என்பதும் மக்களின் ஆவலாக உள்ளனர். இதனை மக்கள் கடந்த இருதசாப்தங்களாக எதிர்பார்க்கிறார்கள் இந்த வேளை இம் மண்ணில (யாழ்ப்பாணத்தில்) ஒரு புறமாக புலிகளது மே தினக் கூட்டமும் நடக்கின்ற சூழல் இருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கும் என அங்கலாய்ப்புற்றார் 43 வயதுடைய வர்த்தகர் ஒருவர் □

# போர் முனையில் போன வாரம்

வெள்ளிக்கிழமை. 24, 1998

கிழக்குப் பிராந்தியத்தில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையே நடந்த மோதலில் நான்கு புலிகள் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது

சனிக்கிழமை, 25, 1998

மாங்குளத்திற்கு அண்மையில் படையினருக்கும் புலிகளுக்குமிடையே நடந்த மோதலில் புலிகள் மூவர் உயிரிழந்தனர் என அரசு அறிவித்துள்ளது.

புலோலியில் பல்லப்பை இராணுவ முகாமில் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவரீ கொல்லப்பட்டார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

ஞாயிறு 26, 1998

அம்பகாமத்திற்கு தென்மேற்கே படையினருடன் நடந்த மோதலில் இரு புலிகள் உயிரிழந்துள்ளனர்.

கந்தளாய், மொறவேவ பகுதியிலுள்ள பம்பரகஸ்வெவயில் ஊர்காவல் படை வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

மன்னார் பரப்பால் கண்டலில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் ஒரு இராணுவ வீரன் கொல்லப்பட்டதுடன் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

திங்கட்கிழமை 27, 1998

சித்தாரா இசை நிகழ்ச்சியை தமிழ் மக்கள் வருகை தந்து ரசிப்பதற்கு உதவியாக யாழ்ப்பாணம், நல்லூர், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஊரடங்கு 512 படையணித்தளபதியால் முற்றாக தளர்த்தப்பட்டிருந்தது.

திருமலை கண்டலடி ஊற்றுப்பகுதியில் தடை செய்யப்பட்ட கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற இரண்டு முஸ்லீம் மீனவர்கள் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மூதூர் பகுதியில் புலிகளுக்கெதிராக 'புலிவேட்டை' எனும் பாரிய இராணுவ நடவடிக்கையை அரசுப்படை ஆரம்பித்துள்ளது. வெருகல் ஆற்று படகுப்பாதை குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - கல்முனை வீதியிலுள்ள கிரான் குளத்தில் கற்குவியல் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்ட இரு குண்டுகளை படையினர் மீட்டு எடுத்து செயலிழக்கச் செய்தனர்.

செவ்வாய் 28, 1998

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பன்சன் கொடல இராணுவ மினி முகாம் மீது புலிகளின் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு மோட்டார் மற்றும் சிறு ரக ஆயுதங்கள் கொண்டு தாக்கி அழித்துள்ளனர். இதில் 3 படையினர் கொல்லப்பட்டதுடன் 9 பேர் காயமடைந்தனர். இத் தாக்குதலில் அரச துருப்புகளுக்கு ஆதரவாக M1. 24 ரக உலங்கு வானூர்திகள் விடுதலைப் புலிகள் மீது பதில் தாக்குதல் நடத்தின. 10 நிமிட தாக்குதலில் புலிகள் முகாமை கைப்பற்றி தீயிட்டு அழித்தாகவும் ஆயுதங்கள் யாவும் கைப்பற்றப்பட்டன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி தட்டுவான் கொட்டிப் பகுதியில் குளிக்கச் சென்ற படையினர், புலிகள் மறைத்துவைத்த கிளைமோர் கண்ணி வெடியில் சிக்கிக் கொண்டனர். இச்சம்பவத்தில் இரு படையினர் கொல்லப்பட்டதுடன் 3 படையினர் படு காயமடைந்தனர்.

முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்து படையினரிடம் சரணடைந்து அவர்களுடன் இணைந்து செயற்பட்டவரென தெரிய வரும் இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு கொம்மாந்துறை வீதியில் உள்ள கொம்மாந்துறை இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று சாகாமம் மற்றும் கல்முனைக் குடிப் பிரதேசங்களில் அம்பாறை பாதுகாப்பு இணைப்புப் பிரிவினர் நடாத்திய தேடுதல் நடவடிக்கையில் 33 தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப் பட்டு வருகிறார்கள்.

புதன்கிழமை, 29, 1998

வன்னிப் போர் முனையில் அம்பகாமத்திற்கு தென்மேற்கே அரச படைகளும் புலிகளும் மோதிக் கொண்டனர். இதில் புலிகள் இருவர் இறந்துள்ளனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் சந்துருக்கொண்டான் இராணுவ பொலிஸ் காவலரண் முன்பாக வாவியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'புளுஸ்ரார்' ரகத்தை சேர்ந்த அதிவேக கண்ணாடி இழைப் படகு ஒன்று இரவு வேளையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

களுத்துறையிலுள்ள தன்னியக்க தொலைத் தொடர்பு பரிவர்த்தன நிலையம் குண்டுத்தாக்குதலால் முற்றாக சேதமடைந்துள்ளது.

வியாழக்கிழமை, 30, 1998

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியிலுள்ள மாவடி வேம்பில் வீதிக்காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கொம்மாந்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் மீது புலிகள் தாக்கினர். இதில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

மீசாலை வடக்கு வேம்பிராய் சந்திப்பகுதியில் இடம் வெற்ற கிரனெட் வெடிப்பு சம்பவத்தில் இரு சிப்பாய்கள் காயமடைந்ததாக தெரியவருகிறது. இதற்கிடையில் சிக்கிக் கொண்ட இளைஞர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

அம்பாறையில் திருக்கோயில் பகுதியில் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் மோதல் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னியில் செட்டிக்குளம் பகுதியில் முன்னணிக் காவலரண் பகுதிக்கு காவற்கடமைக்கு சென்ற இராணுவ சிப்பாய் ஒருவர் பாதுகாப்பிற்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கி படு காயமடைந்துள்ளார். □

## நெருக்கடிகள்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருவம், நடை, பிளிறல் யாவும் தத்ரூபமாய் அமையுமாறு அதனை உருவாக்கிய கலைஞரை எவ்வளவு பாராட்டினும் தகும். ஆனால் சிறிய மேடையை நிறைத்துக் கொண்டு இயல்பாக நடை பயின்று (இது நடைபயிற்றி யானையினுள்ளே சேர்த்துப் பிடித்து நின்றவர்களின் திறமைக்குச் சான்று) பலரையும் கவர்ந்த யானையை அரியாத்தை அடக்கிக் கயிறிட்டுக் கட்டியதைக் காட்டாமை பெருங்குறைதான். அவ்வாறு செய்வது சிரமசாத்தியம் என்பதை மறுக்கவியலாது. ஆனால் பாம்பு (பரத நாட்டிய அபிநயத்தைச் சிறுமி பிடித்துப் பாராட்டத்தக்கவகையில் அபிநயம் செய்தாள்.) செய்த அபிநயம் போல யானையையும் செய்விக்க முயன்றிருக்கலாம். முயற்சி கைகூடாமைக்கு யானையின் பிரமாண்ட உரு தடையாயினது போலும். இது போன்றே (அரண்மனை, காடு) இறக்கியேற்றும் திரைகள் அவசியமா என்பதும் சிந்திக்க வேண்டியதே.

வெயிலின் தணல் வீச்சு, புளுக்கம் என்பவற்றையெல்லாம் பொருட்படுத்தாது மண்டபம் நிறைந்திருந்த இரசிகர் கூட்டம் கூத்தைப் பெரிதும் இரசித்தது என்பதற்கு ஐயம் இல்லை. அவலங்கள், இழப்புக்கள், நெருக்கடிகள் மிகுந்த ஒரு காலகட்டத்தில் நயத்தக்க நாட்டுக் கூத்தொன்றினைப்பெரும் எடுப்பின் நடத்திய சாதனையை மெற்றாஸ்மயில் புரிந்துள்ளமை மிகவும் பாராட்டிற்கு உரியது. இவரின் பணி மேலும் தொடர எனது வாழ்த்துக்கள். □

## யாழ் மண்ணில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களித்த புளொட் அமைப்பினருக்கும் குறிப்பாக மாணிக்கதாசன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரியதாகும் எனவும் குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சியில் தற்போதைய யாழ்ப்பாண நிலைபற்றி விபரிக்கும் புதிய பாடல் ஒன்றை எழுதிப்பாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாநகரில்
கண்ணியமான, பாதுகாப்பான
தங்குமிட வசதிகளுக்கு
**துசிற்ரா விடுதி**
177 பழைய சோனக தெரு, கொழும்பு 12
தொலைபேசி இல. 341272, 341273, 341274,
யாழ் நகரில்
குறைந்த கட்டணத்தில்
உள்ளூர் வெளிநாட்டு தொலைபேசித்
தொடர்புகளுக்கு ;
**தம்பி கொம்யூனிக்கேசன்ஸ்**
90 கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் : 2504, 2040, 2994
தொலைப்பிரதி (Fax) ; 021 - 2040

## இழப்புக்களை

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கை பற்றிய சரியான கணிப்பீடு பிரதேச செயலகங்களிலோ அல்லது மிதாந்திய அரசாங்க அதிகாரிகளிடமோ இல்லை. இருக்கின்ற புள்ளி விபரங்கள் கூட பால், வயது திருமண அந்தஸ்து என்பவற்றைக் கொண்டு பகுக்கப்படாமல் உள்ளன. கிராமமட்டத்தில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கூட இது பற்றிய முழுமையான மதிப்பீடு கிடையாது. இந்நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட இப்பெண் குழுக்களை அடையாளம் காண்பதற்கு வாய் மூலக் கூற்றுக்களையே நம்பியிருக்கின்றன. அதே வேளை சில பிரதேசங்களில் விதவைகளுக்கு அரசினது ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் மூலம் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. பண ஒதுக்கீடு இப் பெண்களுக்கு செய்யப்பட்டுள்ள போதும் இவர்கள் இது பற்றி அறிந்திருக்காததோடு பிரதேச செயலாளர் பிரிவுகளும் அப் பணத்தை வழங்கவுமில்லை, இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற முடியாமையும் பணம் பெற முடியாமைக்குரிய காரணமாக அமைகிறது. அத்துடன் நட்டஈடு பெறும் துணையை இழந்த பெண்களின் எண்ணிக்கை வெளியிடப்படுவேது இல்லை.

கணவன்மார் காணாமல் போன நிலையிலுள்ள பெண்களே அதிக பாதிப்புக்குள்ளாகின்றனர். இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறலாம் என அரசு தீர்மானிக்கும் வரை உதவி பெறும் வழியற்றவர்களாகவே இவர்கள் உள்ளனர். கணவர் காணாமல் போன பிறகு ஒரு பெண் ஏழு வருடங்கள் இறப்புச்சான்றிதழுக்காகக் காத்திருக்க வேண்டிய விதியே முன்னர் இருந்தது. தற்போது இவ் விதி ஒரு வருடமாகக் குறைக்கப்பட்டுள்ளது; நீதிபதியின் முன்னால் கிராமசேவை அதிகாரி காணாமல் போனதை அத்தாட்சிப்படுத்தியதும் நீதிபதியின் கட்டளைப்படி இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும். எவ்வாறெனினும் மனிதாபிமான அடிப்படையில் இவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்க வேண்டியது ஓர் அவசரமான தேவையாகும். ஓய்வூதியம் சேமிப்புக்கணக்குகள், காப்புறுதி நலன்கள், நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் என்பவற்றைப் பெற இச்சான்றிதழ் அவசியமானது. இத்தகைய நிதி வரவுகள் எவ்வளவு சிறிதாயினும் அவர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் ஒரு புதிய வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக இருக்கும்.

நன்றி ;
ஒப்ஷன்ஸ் - ஒகஸ்ட் 1994
தமிழில் :
வெ. அழகரெத்தினம்

## இயக்கங்

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொள்ளும் நிலைக்கு வர வேண்டுமானால் முதலில் எம் மத்தியில் ஒற்றுமை தேவை எம்மை ஒற்றுமைப் படுத்தும் சக்தியாக தமிழர் விடுதலைக் கூட்டணி விளங்கும் எனக் கருதினோம், ஆனால் அது நிறைவேறவில்லை என்றார்.

## போராட்டம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாளரும் மாநகர சபை உறுப்பினருமான த. சுபத்திரன் (றொபேட்) மே தினக்கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

## அபிவிருத்தி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டு வருகிறது.

இவ்வாறு நல்லூர் பிரதேச சபை தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் நிஷாத்தன் நீர்வேலியில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இப் பத்திரிகை காலைக்கதிர் நிறுவனத்தின் சார்பாக பா. அன்பழகன் அவர்களால் 1998 மே 01 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டது.
காலைக்கதிரின் அச்சுயந்திரத்துடன் அச்சுப்பதிவு: முல்லை அச்சகம், ஆடிபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.